கலைஞர் 100
1924 - 2023

தமிழரசு
Tamilarasu

(Monthly)

நவம்பர் 2023 (November 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 5

இறுதி செய்யப்பட்ட 7.35 இலட்சம் பயனாளிகளுடன்
இதுவரை 1,13,84,300 மகளிருக்கு

“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,

30.10.2023 அன்று, **பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்** அவர்களின் 116ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர்மாலை வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 5

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

இதழ் வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிருந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குறள் - 267)

தம்மைத் தாமே வருத்திக் கொண்டு ஒரு குறிக்கோளுக்காக நோன்பு நோற்பவர்களை எந்தத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப்போல் புகழ் பெற்றே உயர்வார்கள்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ இறுதி செய்யப்பட்ட 7.35 இலட்சம் பயனாளிகளுடன் இதுவரை, 1,13,84,300 மகளிருக்கு "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" 4

★ தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காத்திட வேண்டும் 9

★ ரூ.40 கோடி முதலீட்டில், 2,000 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை 11

★ ரூ.23.14 கோடி செலவில் விளையாட்டுத்துறைக் கட்டமைப்புகள், ரூ.49.79 கோடி செலவில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் 15

★ வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் விருது 24

★ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ரூ.9.40 கோடி உயரிய ஊக்கத்தொகை 28

★ தமிழ்நாட்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்த் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்கான நிதி ரூ.2,697 கோடியினை உடனடியாக விடுவிக்க வேண்டும் 40

★ மாற்றுத்திறனாளிகளுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.1,773 கோடி மதிப்பில் "உரிமைகள் திட்டம்" 44

★ செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில் "கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம்" 48

★ உயிர்த்துடிப்பு-சிறுகதை 79

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 10.11.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 7.35 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் **கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத்** தொடங்கி வைத்தார்.

இறுதி செய்யப்பட்ட 7.35 இலட்சம் பயனாளிகளுடன் இதுவரை, 1,13,84,300 மகளிருக்கு "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 10.11.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான 7.35 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
> கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை
> தொடங்கி வைத்து ஆற்றிய
> உரை – 10.11.2023

மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 27.03.2023 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக

இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இந்த மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், அரசு உயர் அலுவலர்களையும் அறிவுறுத்தி இருந்தார்.

தருமபுரியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பப் பதிவு முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 24.07.2023 அன்று தொடங்கி வைத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்துகொள்ள 1 கோடியே 63 இலட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்தது. அவற்றில் தகுதியுள்ள 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

புதிய பயனாளிகளுக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் உரிமைத் தொகை வழங்குதல்

கலைஞர் உரிமைத் திட்டத்தின் கீழ் முகாம்களில் விண்ணப்பித்துக் கள ஆய்வு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 7.35 இலட்சம் புதிய பயனாளிகளுக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இத்திட்டத்தின்கீழ்த் தற்போது புதியதாகக் கண்டறியப்பட்டுள்ள 7.35 இலட்சம் பயனாளிகளுக்கும், ஏற்கெனவே, வழங்கப்பட்டு வரும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுடன் சேர்த்துத் திட்டத்தினை விரிவாக்கம் செய்து மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு நவம்பர் மாதத்திற்கான உதவித் தொகையினை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கடந்த சில நாட்களாகக் காய்ச்சலும், தொண்டை வலியும் எனக்கு இருந்தது. இப்போது காய்ச்சல் குறைந்துவிட்டாலும், தொண்டை வலி மட்டும் இருக்கிறது. என்னுடைய குரலைக் கேட்கும்போதே உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான், சில நாட்களாக வீட்டிலேயே முழு ஓய்வு எடுத்துக்கொண்டேன். இந்த வாரம் முழுக்க ஓய்வெடுக்கவேண்டும் என்று என்னுடைய மருத்துவர்கள் சொன்னாலும், என்னால் மக்களைச் சந்திக்காமல் இருக்க முடியவில்லை! அதனால்தான், தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி மூலமாக இணைந்திருக்கின்ற உங்களை எல்லாம் நான் பார்க்க வந்துவிட்டேன். தொண்டை வலி இருந்தாலும், தொண்டில் தொய்வு ஏற்படக் கூடாது! அதனால்தான் வந்துவிட்டேன்.

உங்களைப் பார்க்கும்போது என்னுடைய உடல் வலி எல்லாம் குறைந்து, மனது மகிழ்ச்சியில் நிறைந்து விட்டது!

இந்த ஆயிரம் ரூபாயை வாங்கும்போது உங்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியைவிட, கொடுக்கும்போது, எனக்குதான் அதிகமான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியைவிட சிறந்த மருந்து எதுவாக இருக்க முடியும்? அதனால்தான், மருத்துவர்கள் அறிவுரையையும் மீறி இந்த விழாவுக்கு வந்துவிட்டேன்.

உதவித்தொகை இல்லை உரிமைத் தொகை

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று தேர்தலுக்கு முன்பாகவே சொன்னோம். அப்போது சிலர் என்ன சொன்னார்கள் என்றால், “இதையெல்லாம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதி”, “இவர்கள் ஆட்சிக்கு வரவே மாட்டார்கள்” இதுமாதிரி ஒவ்வொருவரும் நிறைய சொன்னார்கள். கட்டம் எல்லாம் பார்த்தார்கள். ஆனால், நீங்கள் எல்லோரும் என்ன சொன்னீர்கள்? “தி.மு.க.தான் ஆட்சிக்கு வரவேண்டும்” “தி.மு.க. சொன்னால், சொன்னதை நிறைவேற்றும். கலைஞர் மகன் ஸ்டாலின்தான் முதலமைச்சராக வரவேண்டும்” என்று ஓட்டு போட்டுப் பதிலடி தந்தீர்கள். உங்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவன் நான்! இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொன்னால், சொன்னதை நிச்சயம் செய்வேன்! அதற்கு அடையாளமாகத்தான், மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்குகிறோம். அதனால்தான் உங்கள் முன்னால் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறேன்!

கடந்த செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் பெருந்தகைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். செப்டம்பர் 15, அக்டோபர் 15 என்று இரண்டு மாதங்களுக்கான 2,000 ரூபாயை, ஒரு கோடியே ஆறு இலட்சம் சகோதரிகள் வாங்கி விட்டார்கள். இந்த முறை முன்கூட்டியே இன்றைக்கு மாலைக்குள் அடுத்த ஆயிரம் ரூபாயும் உங்களுக்கு வந்து சேர்ந்துவிடும்.

மகளிருக்கு, சொத்துரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு கொடுத்து உங்களுடைய உரிமைகளுக்காக, பாதுகாவலராக இருந்த தமிழினத் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டில் தொடங்கி கொடுக்கப்படுகிற இந்தத் தொகை, உதவித்தொகை இல்லை; உரிமைத்தொகை! இந்த உரிமைத் தொகை உண்மையிலேயே தேவையும், தகுதியும் உள்ள அனைத்து மகளிருக்கும் போய்ச் சேரவேண்டும் என்பதில் நம்முடைய அரசு மிகவும் கவனமாக இருந்தது.

வி.ஏ.ஓ. அலுவலகம், தாலுகா அலுவலகம் என்று எங்கேயும் செல்லாமல் அலைச்சலில்லாமல், பொதுமக்களுக்கு எந்தச் சிரமமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று அரசே உங்களிடம் வந்து விண்ணப்பங்களை வாங்க எப்படி வாங்கினார்களோ அதேபோல, அந்த விண்ணப்பங்களை வாங்குகின்ற முகாம்களை அமைக்க சொன்னேன். கடந்த ஜூலை 24ஆம் தேதி, தருமபுரி மாவட்டம், தொப்பூரில் அந்த முகாமை, நானே நேரில் சென்று தொடங்கி வைத்தேன். ஏறக்குறைய ஒரு கோடியே 63 இலட்சம் மகளிர் விண்ணப்பித்தார்கள். இதற்கும் சிலர் விமர்சனம் செய்தார்கள்!

வங்கிக் கணக்கு, பணவிடை மூலம் உரிமைத் தொகையும்

தகுதியுள்ள மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படும் என்று சொன்னதை, தேர்தல் வாக்குறுதிக்கு முரணாகச் செய்கிறார்கள் என்று பேசினார்கள்! நாம் தொடக்கத்தில் இருந்தே தெளிவாகச் சொன்னோம். தகுதி உள்ளவர்கள் யார் யாரென்று நேர்மையான, பாரபட்சமற்ற விதிமுறைகளின் அடிப்படையில், அரசு சார்பில் வெளியிடப்பட்டு, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை குடும்ப அட்டைதாரர்களையும் விண்ணப்பிக்கச் சொன்னோம்.

இந்தத் திட்டத்தின் நோக்கத்தையும், விதிமுறைகளின் குறிக்கோளையும் மக்கள் உள்ளார்ந்து புரிந்துகொண்ட காரணத்தால், 2 கோடியே 24 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில், 1 கோடியே 63 இலட்சம் மகளிர் மட்டும் விண்ணப்பித்தார்கள்!

மக்களுடைய இந்தப் புரிதல், இந்தத் திட்ட விதிமுறைகளுக்கான நியாயத்தை காண்பித்தது. விமர்சித்தவர்கள் அமைதி ஆகிவிட்டார்கள். இப்படி விண்ணப்பித்தவர்களிலிருந்து, 1 கோடியே 6 இலட்சத்து 58 ஆயிரத்து 375 தகுதியுள்ள மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, எல்லோருக்கும் அவர்களுடைய வங்கிக் கணக்கில், இந்தத் திட்டம் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பாகவே, அதாவது, செப்டம்பர் 14ஆம் தேதியே, அந்த மாதத்திற்கான உரிமைத்தொகையான 1,000 ரூபாயை நாம் வரவு வைத்தோம். அந்த மாதம், வங்கிக் கணக்கு இல்லாத

2 இலட்சத்து 42 ஆயிரத்து 956 பயனாளிகளுக்கு, பணவிடை மூலம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அடுத்து அக்டோபர் 15ஆம் தேதி வங்கிக் கணக்குகளில் வரவு வைத்தோம். பணவிடை மூலம் உரிமைத்தொகை வழங்கப்பட்ட மகளிருக்கு, வங்கிக் கணக்குத் தொடங்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாட்டிற்கே முன்னுதாரணமான திட்டம்

இவ்வளவு பெரிய திட்டம்! ஒரு கோடிக்கும் அதிகமான பயனாளிகள்! அவர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய்! ஆனால், எந்தச் சிறிய புகாருக்கும் இடமில்லை! அதுதான், இந்தத் திட்டத்தின் மிகப்பெரிய வெற்றி! அந்தப் பெருமிதத்துடன் சொல்கிறேன், 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' நாட்டிற்கே முன்னுதாரணமாக அமைந்திருக்கக்கூடிய திட்டம்!

ஒரு திட்டம் பெற்ற வெற்றியைத் தொடர வேண்டுமென்றால், அதை தொடர்ந்து கவனிக்க வேண்டும்! அதனால், முகாம்களில் விண்ணப்பித்து, தகுதி இருந்தும் தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பதாரர்களுக்கும், முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில், பதிவாகாமல் போன விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களும் தரவுகளைத் தொடர்ந்து சரிபார்க்கப்பட்டது. இதற்காக மட்டுமே அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஏறக்குறைய 54,220 அலுவலர்கள் மாவட்ட அளவிலும், கிராம அளவிலும் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் சரிபார்த்து ஒரு பட்டியலை எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதில் இந்த மாதத்திலிருந்து, 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் புதிய பயனாளிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

புதிய பயனாளிகளான என் அன்புச் சகோதரிகள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்! உங்களுக்கான 1,000 ரூபாயை நேற்றே உங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது!

உங்களுடன் சேர்த்து, மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 பேர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் ரூ.1,000 இனி பெறப் போகிறார்கள். நீங்கள் மட்டுமல்ல, தகுதியுள்ள யாரும் விடுபட்டுவிடக் கூடாது என்று கவனமாக இருக்கிறோம். அதானல்தான், விண்ணப்பித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தை, குறுஞ்செய்தியாக அனுப்பி வைத்தோம். அந்தக் காரணம் ஏற்புடையதாக இல்லையென்றால், மேல்முறையீடு செய்யவும் வாய்ப்புக் கொடுத்தோம். அதை பயன்படுத்தி, மேல்முறையீடு செய்தார்கள். அவர்களுடைய விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

சரிபார்ப்பு அலுவலர்கள் களஆய்வு செய்து, தகுதிபெறும் மகளிருக்கு, வருகிற டிசம்பர் மாதத்தில் இருந்து, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' மூலமாக 1,000 ரூபாய் வழங்கப்படும். தகுதியுள்ள அனைவருக்கும் இந்த உரிமைத் தொகை கிடைக்கின்ற வரைக்கும், திராவிட மாடல் அரசின் இந்தப் பணி நிச்சயம் தொடரும்!

கடந்த மார்ச் 27ஆம் தேதி சட்டமன்றத்தில் இந்தத் திட்டத்தைப் பற்றி பேசும்போது, ஏறத்தாழ 1 கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ரூ.1,000 வழங்கிடும் வகையில் இந்தத் திட்டம் அமையும் என்று நான் சொன்னேன். ஆனால், இன்றைக்கு, 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 பயனாளிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் இந்தத் திட்டத்தின் மிகப்பெரிய வெற்றி!

ஊருக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கிய தேர்

இதே மாதிரியான திட்டம், வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டபோது, பொதுமக்கள் கூட்ட நெரிசல்களில் எப்படிப்பட்ட இன்னல்களுக்கும், அலைக்கழிப்புக்கும் ஆளாகினார்கள் என்று ஊடகங்களில் வந்தது. அதுமாதிரி எந்த நிகழ்வும் இல்லாமல் அமைதியான முறையில் அனைத்துத் தகுதியுள்ள மகளிரையும் இந்தத் திட்டம் சென்று சேர்ந்திருக்கிறது. எந்தவிதமான சர்ச்சைக்கும் இடமளிக்காத வகையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக்காட்டிய பெருமை, அரசு அலுவலர்களையும், பணியாளர்களையும்தான் போய்ச் சேரும்!

இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள், அரசு அலுவலர்களுடன் இந்தத் திட்டச் செயல்பாடு குறித்துத் தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்களை நடத்திக்கொண்டே இருப்பார்.

அவருக்கும் என்னோட வாழ்த்துக்கள். தொடர்ந்து களத்திலும் ஆய்வு செய்துகொண்டு இருக்கிறார். அது இனியும் தொடரும். அதில் எந்தவித சந்தேகமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை.

நம்முடைய தலைமைச்செயலாளர், வளர்ச்சி ஆணையர், நிதித்துறைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கடந்த சில மாதங்களாக, ஏறக்குறைய 50 முறைக்கும் மேலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி இந்தத் திட்டத்தில் எந்தவித குறைபாடும் ஏற்படாமல் செயல்படுத்துவது குறித்து விவாதித்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக சொல்லவேண்டும் என்றால், மாண்புமிகு அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் முதல், தமிழ்நாட்டின் கடைக்கோடியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் என அனைத்து நிலை பணியாளர்களும் தொடர்ந்து உழைத்ததின் விளைவுதான், இந்த மாபெரும் வெற்றி!

இது, ஊர் கூடி, 'இழுத்த தேர்!' ஊருக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு, 'உருவாக்கிய தேர்!' 'மக்களின் தேர்' இது! தேசிய ஊடகங்களும், பிற மாநில அரசுகளும் கூட நம்முடைய இந்தத் திட்டமிடல், நிருவாக நடைமுறையை வியந்து பார்க்கிறார்கள். அந்த வகையில், இந்த திட்டம் இவ்வளவு பெரிய இமாலய வெற்றி பெற உழைத்திட்ட அனைவருக்கும் என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், என் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப்பெரிய சாதனையை அமைதியாகச் செய்து காட்டி இருக்கிறோம். திராவிட மாடல் ஆட்சியில், இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான மாநிலமாக, தமிழ்நாடு தொடர்ந்து வளரும்! வளரும்!

நிறைவாக, தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு நிகழ்ச்சியில் பங்கேற்ற சகோதரிகள் அனைவருக்கும் மீண்டும் உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலினுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி - 29.10.2023

சிக்கனத்தின் இன்றியமையாமையை அனைவருக்கும் உணர்த்திடும் நாளாக அக்டோபர் திங்கள் 30ஆம் நாள், ஆண்டுதோறும் "உலகச் சிக்கன நாள்" எனக் கொண்டாடப்படுவதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைவதுடன் என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமித்தால், அதன்வாயிலாகக் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன், அவ்வப்போது ஏற்படும் எதிர்பாராச் செலவினங்களையும் சமாளித்திட இயலும்.

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்ற குறளில் வள்ளுவர் பெருந்தகை, பொருள் வரும் வழிச் சிறிதாக இருந்தாலும், பொருள் செலவாகும் வழிப் பெரிதாக இல்லையெனில், அதனால் தீங்கு இல்லை என்று சிக்கனமாக வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். சேமிப்பின் அவசியத்தைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே எடுத்துரைத்து, சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். "இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு" என்பதனைக் கருத்தில்கொண்டு, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்க வேண்டும்.

சேமிப்பே ஒருவரின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுகிறது. சேமிப்பது மட்டுமல்ல, அதைச் சரியான வீதத்தில் முதலீடு செய்வதும் முக்கியம். எனவே, உலகச் சிக்கன நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், மக்கள் தங்கள் சேமிப்புகளை அஞ்சலகச் சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதுடன், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிந்திட வேண்டுகிறேன்.

சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

“தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காத்திட வேண்டும்”

சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி **திரவுபதி முர்மு** அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்–27.10.2023

சென்னை, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, டெல்லி புறப்பட்டுச் செல்லும் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை விமான நிலையத்தில் 27.10.2023 அன்று சந்தித்தார். அப்போது, மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ள, தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு 2021க்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென நேரில் வலியுறுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, 27.10.2023 அன்று தான் எழுதியுள்ள கடிதத்தையும் வழங்கினார்.

அக்கடிதத்தில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) அடிப்படையிலான மாணவர் சேர்க்கை, ஏழை மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றதாகவும், இந்த செயல்முறை கடந்தகாலங்களில் மாநிலத்தில் நல்ல பலன்களை அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசு நீட் தேர்வை அறிமுகப்படுத்தியதாலும், அதைத் தொடர்ந்து ஒன்றிய சட்டங்களில் செய்யப்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாகவும், ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் நடைபெற்ற சேர்க்கை முறை நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகளை ஆராய்ந்து, மாற்று வழிகளை செயல்படுத்துவதற்கு தேவையான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையிலான குழு அளித்த

பரிந்துரைகளின் அடிப்படையிலும், பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று 'தமிழ்நாடு இளநிலை மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2021' (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு 18.09.2021 அன்று அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஐந்து மாத காலத்திற்குப் பிறகு, மேற்படி சட்டமுன்வடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழ்நாடு அரசுக்குத் திருப்பியனுப்பிய நிலையில், 08.02.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறவேண்டி மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர், மேற்படி சட்டமுன்வடிவு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவு தொடர்பாக ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஒன்றிய உயர்கல்வித் துறை, ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஆயுஷ் அமைச்சகம் கோரிய அனைத்து விளக்கங்களும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு உரிய காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ளதாகத் தேதி வாரியாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு அரசின் சார்பில் போதிய விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகும் இந்த விஷயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாததால், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, 14.08.2023 அன்று தான் கடிதம் எழுதியிருந்ததாகவும், அதில், நீட் தேர்வினால் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மாணவர்கள் தற்கொலைகள் குறித்தெல்லாம் குறிப்பிட்டு, இனியும் தாமதிக்காமல் மேற்படி சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமெனத் தான் கோரியிருந்ததை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதோடு, ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய கேள்விகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இதுவரை இந்த சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலை உள்ளது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவலைப்படத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், நீட் விலக்குத் தொடர்பான சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிப்பதில் ஏற்பட்டுள்ள அதீத காலதாமதம், அதிக கட்டணங்களைச் செலுத்தி பயிற்சி பெற முடியாத, பல தகுதிவாய்ந்த மாணவர்களின் மருத்துவ சேர்க்கையைப் பறித்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் பரந்த சட்டமன்ற, அரசியல் மற்றும் சமூக ஒருமித்த கருத்தின் நோக்கத்தைச் செயல்படுத்திட இயலாமல் முடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த உணர்வுப்பூர்வமான பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, நீட் விலக்குத் தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரூ.40 கோடி முதலீட்டில் 2,000 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 01.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தினை விரிவுப்படுத்தும் வகையில் நிதி வசதி குறைவாக உள்ள 2,000 திருக்கோயில்களில் ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ரூ.2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40 கோடிக்கான காசோலையினைத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாகத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.அம்பலவாணன் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வைப்பு நிதிக்கான காசோலையை வழங்கினார் – 01.11.2023

இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள நிதி வசதி குறைவாக உள்ள ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு உதவும் வகையில் ஒரு கால பூஜைத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு திருக்கோயிலின் பெயரிலும் ஒரு இலட்சம்

ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து பூஜை செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில் விலைவாசி உயர்வின் காரணமாக பூஜை செலவினத்திற்குப் பற்றாக்குறை ஏற்பட்ட நிலையை ஈடுகட்டும் வகையில் 2021-2022ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "12,959 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.130 கோடி நிலை நிதி ஏற்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஒருகால பூஜை நடைபெறும் 12,959 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே வைப்பு நிதியாக ஒவ்வொரு கோயிலுக்கும் வழங்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசு மானியமாக ரூ.130 கோடிக்கான காசோலையினைத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது. மேலும், 2022-2023ஆம் ஆண்டில் கூடுதலாக 2,000 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அரசு மானியமாக ரூ.40 கோடிக்கான காசோலை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது.

2023-2024ஆம் ஆண்டிற்கான இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில் "ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதிவசதியற்ற 15,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டம், கூடுதலாக 2,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இவ்வாண்டு விரிவுப்படுத்தப்படும். இதற்கான அரசு மானியமாக ரூ.30 கோடியும் பொதுநல நிதியாக ரூ.10 கோடியும் வழங்கப்படும். இத்திட்டத்தில் சேர்க்கப்படும் 2,000 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத உதவித்தொகை ரூ.1,000 வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒருகால பூஜைத் திட்டத்தினை மேலும் 2,000 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ரூ.2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40 கோடிக்கான காசோலையினைத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாகத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் வழங்கினார்.

படமும்/செய்தியும்

விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ்ப் பணி நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ் (Sports Quota) விளையாட்டு வீரர்கள் திரு.எஸ்.மனோஜ், திரு.ஆனந்தன், செல்வி ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை 02.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

கடலூரில்

சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் – 02.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூக நீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அஞ்சலை அம்மாள் அவர்கள் சிறுவயது முதல் சுதந்திரப் பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபோது அதில் கலந்து கொண்டு அஞ்சலை அம்மாள் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். சென்னையில் நடைபெற்ற ஆங்கிலேய படைத்

தளபதி ஜேம்ஸ் நீல் சிலை அகற்றும் போராட்டம், கடலூரில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகம் மற்றும் அந்நிய ஆடை எதிர்ப்புப் போராட்டம், 1940ஆம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதற்காகச் சிறை தண்டனை பெற்றார்.

அஞ்சலையம்மாள் விடுதலைப் போராட்டத்திற்காகத் தனது குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, நாட்டிற்காகத் தியாகம் செய்தார். "தென்னாட்டின் ஜான்சிராணி" என்று மகாத்மா காந்தியடிகளால் அழைக்கப்பட்ட அஞ்சலையம்மாள் அவர்கள், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

இத்தகைய சிறப்புமிக்க சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலையம்மாள் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறை மானியக் கோரிக்கையில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றத் தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

படமும் / செய்தியும்

தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு 1,500 புத்தகங்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1,500 புத்தகங்களைத் தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு 28.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நன்கொடையாக வழங்கினார்.

★ ரூ.23.14 கோடி செலவில் விளையாட்டுத்துறைக் கட்டமைப்புகள்

★ ரூ.49.79 கோடி செலவில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 02.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், ரூ.23.14 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிருவாக அலுவலகக் கட்டடம், தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம், 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, 9 சட்டமன்றத் தொகுதிகளில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட்கட்டமைப்புப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ் (Sports Quota) மூன்று விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விளையாட்டுத்துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப்

போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்திடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை திறந்து வைத்தல்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ரூ.1.85 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி;

பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.1.88 கோடி செலவில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் நிருவாக அலுவலகக் கட்டடம், தங்கும் விடுதி;

வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.10.81 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கம்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்ட நேரு விளையாட்டு அரங்கத்தில் ரூ.6.55 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுபாதை;

சென்னை, எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் ரூ.2.04 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம்;

என மொத்தம், ரூ.23.14 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டுத்துறை கட்டமைப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதிய விளையாட்டு உட்கட்டமைப்புப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

தென்காசி மாவட்டத்தில் 18.12.2022 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "புதியதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் 2023-2024ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில், சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி, விளையாட்டு வளர்ச்சியினைத் தூண்டும் வகையில் 10 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

2022 - 2023ஆம் நிதி ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் மானியக் கோரிக்கையில், "சென்னையில் இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தினை ஊக்குவிக்க ரூ.2 கோடி செலவில் மற்றுமொரு குத்துச்சண்டை அகாடமி அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளுக்கிணங்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொளத்தூர் மற்றும் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, திருப்பத்தூர் மாவட்டம் - வாணியம்பாடி, திருப்பூர் மாவட்டம் - காங்கேயம், மதுரை மாவட்டம் - சோழவந்தான், தூத்துக்குடி மாவட்டம் - திருவைகுண்டம், புதுக்கோட்டை மாவட்டம் - ஆலங்குடி, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் - பத்மநாபபுரம் ஆகிய 9 சட்டமன்றத் தொகுதிகளில் தலா ரூ.3 கோடி வீதம், மொத்தம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய

திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கி ரூ.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் சென்னை, கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குத்துச்சண்டை அகாடமி ஆகிய பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் மூன்று விளையாட்டு வீரர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாட்டின் சார்பாக ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ் வேலைவாய்ப்பு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாரா தடகள வீரர் திரு. எஸ்.மனோஜ் அவர்கள் இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றமைக்காவும், ஜெர்மனியில் 28.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற்ற உலக உயரம் குன்றிய மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் பங்கேற்று முதல் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும், விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ்த் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீரர் திரு. ஆனந்தன் அவர்கள் அரியானா மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 18ஆவது தேசிய அளவிலான பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப் பந்தயப் போட்டியில் முதல் இரு இடங்களில் வெற்றி பெற்றமைக்காகவும், இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப் பந்தயப் போட்டிகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ் இளநிலை அலுவலராகத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீராங்கனை செல்வி ரோஸிமீனா அவர்கள் 2021ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 24ஆவது ஃபெடரேஷன் கோப்பை தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் முதலிடத்தில் வெற்றி பெற்றமைக்காகவும், அதே ஆண்டு ஜூன் மாதம் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 60ஆவது தேசிய அளவிலான சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் மூன்றாம் இடம் பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின்கீழ் இளநிலை அலுவலராகத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் திரு. எஸ்.மனோஜ், திரு. ஆனந்தன், செல்வி ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy - DiTN) ஆவணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார் - 02.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy - DiTN) ஆவணத்தை வெளியிட்டார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய, பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் "டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்" செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்புகொண்ட, அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆளுமை மற்றும் நிருவாகத்தின் செயல்திறனை மேம்படுத்திடவும், டிஜிட்டல் ஆளுமை மற்றும் அரசின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள, எதிர்கால கொள்கைகள், நடைமுறைகள், அமைப்புகளைக் கருத்தில் கொண்டும் தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (DiTN) வகுக்கப்பட்டுள்ளது. அரசின் துறைகள் தங்களுக்கான டிஜிட்டல் உருமாற்ற வியூகம் உருவாக்குவதற்கும், அதனைச் செயல்படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டியாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூக ஆவணம் பயன்படும்.

அனைத்துத் துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators), பயன்களை (Outcomes) எய்துவதற்கு தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் உதவும். மேலும், தமிழ்நாட்டு மக்களுக்கு விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய, பதிலளிக்கக்கூடிய, வெளிப்படையான (SMART Swift Monitorable, Accessible, Responsive and Transparent) நிருவாகத்தை வழங்கும். தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம், டிஜிட்டல் முதிர்ச்சியை மதிப்பிடுவது முதல் தகவல் தொழில்நுட்ப வியூகத்தைச் செயல்படுத்துவது வரையிலான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கும்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறையை மேலும் வலுப்படுத்துதல், தொலைதூர இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் தேவையான டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பொதுமக்களுக்குக் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வழங்குதல், மாநிலத்தைப் புத்தாக்கம், தொழில் முனைவுக்கான மையமாக மாற்றுதல், செயலிகள், வலைதளங்கள், கியோஸ்க்குகள் (KIOSK) போன்றவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அரசு சேவைகள் வசதியாகக் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் முதல், இரண்டாம் நிலை நகரங்களுடன் டிஜிட்டல் இணைப்புகளை மேம்படுத்துதல் போன்றவை தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள்

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்குச் சென்று 200 ஆண்டுகள் (1823 - 2023) ஆவதை நினைவுகூரும் வகையிலும், அவர்கள் இலங்கைக்கு ஆற்றிய சேவைகளையும், இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பைப் பாராட்டியும் இலங்கை மத்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் திரு. ஜீவன் தொண்டமான் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நாம் 200' என்ற தலைப்பிலான தேசிய நிகழ்வில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலிவாயிலாக வழங்கிய வாழ்த்துரை - 03.11.2023

அனைவருக்கும் வணக்கம்!

இலங்கையில் வாழும் மலையகத் தமிழ் மக்களின் வாழ்வு என்பது 200 ஆண்டுகளை எட்டுகிறது. இரண்டு நூற்றாண்டுகாலமாகத் தனிப்பெரும் இனமாக வாழ்ந்துவரும் மலையகத் தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துக்கள்!

இந்த நிகழ்ச்சியில் நான் காணொலி மூலமாக உரையாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்த அருமை சகோதரர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு - இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகாலம் முதல் தொடங்குகிறது.

1823ஆம் ஆண்டு கம்பளைக்கு அருகே உள்ள சிங்கபிட்டிய என்ற கிராமத்தில் கேப்டன் ஹென்றி பேட் என்ற பிரிட்டிஷ்காரர், 14 இந்தியத் தொழிலாளர்களையும் சில சிங்களத் தொழிலாளர்களையும் வைத்து காப்பித் தோட்டம் தொடங்கினார். இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது.

காப்பித் தோட்டங்கள் பெருகப் பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பி தோட்டத்தை அடுத்துத் தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அதனையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினார்கள். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.

> **“காப்பித் தோட்டங்கள் பெருகப் பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பித் தோட்டத்தையடுத்துத் தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அதனையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினார்கள். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.”**

பயிரிடப்படாத நிலத்தை பயிரிட்டும் - காடுகளாக இருந்த நிலத்தைக் காசுப் பயிர்களாக விளைவித்தும் பின்தங்கிய பொருளாதாரத்தை முன்னணிப் பொருளாதாரமாக ஆக்கியவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்! இப்படிக் கடந்த 200 ஆண்டுகளாக இலங்கையின் நல்வாழ்வுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இன்னமும் வழங்கி வருகின்றனர்.

அதாவது இலங்கை நாட்டுக்காகத் தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது இரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலம்முதல் புலம்பெயர் தமிழர்களது உரிமையைக் காப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டுள்ளது. 1952ஆம் ஆண்டு தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டில் பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள், “இலங்கை வாழ் திராவிட மக்களுக்காக ஓட்டு உரிமையைக் கொடுத்து நீதியை நிலைநிறுத்துங்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்யாதீர். வீண் போக்கு வெற்றியைத் தராது” என்று பேசினார்.

தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாட்டில் தனித் தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. 1957 தேர்தல் அறிக்கையில், தமிழர்கள் நிறைந்துள்ள வெளிநாடுகளில், தமிழர்களே தூதுவர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று தி.மு.க. கோரியது. இப்படித் தமிழ் மக்களது உரிமைகளுக்காக ஆரம்ப காலம் முதல் குரல் கொடுக்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

“கடல் நீர் உப்பாக இருப்பது ஏன்? அது கடல் கடந்த தமிழர்களின் கண்ணீரால்!” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு திரும்பியபோது அவர்களை அரவணைத்துத் தமிழக மலைப்பகுதிகளில் குடியமர்த்தி TANTEA, அரசு ரப்பர் தோட்டங்கள் மூலம் அவர்கள் வாழ்வில் உயர வழிவகை செய்தோம்.

அந்த உணர்வோடுதான் அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகி துயர் துடைக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். உரிமை காக்கவும் உதவிகள் செய்து வருகிறோம். அந்த வகையில், மலையகத் தமிழ் மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலையகத் தமிழர்களின் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போல கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.

நாட்டை வாழ வைத்த மக்களை வாழ வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காகத் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும்.

நன்றி! வணக்கம்!

பொதுத்துறை நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுக்கு 2022-2023ஆம் நிதியாண்டிற்கான ரூ.307.22 கோடி பங்கு ஈவுத்தொகை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் வழங்கப்பட்டன – 02.11.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம், 02.11.2023 அன்று , தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள், தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL) ஆகியவற்றின் சார்பாகத் தமிழ்நாடு அரசுக்கு 2022-2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக மொத்தம் ரூ.307.22 கோடிக்கான காசோலைகள் / வரைவோலையை வழங்கினார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)

தனியார் தொழில்முனைவோருடன் இணைந்து, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தவும், கூட்டு முயற்சிகள் வழியாக முதலீட்டை ஈர்த்து, மாநிலத்தை உலகளாவிய தொழில் மையமாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022-2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக ரூ.204.01 கோடிக்கான காசோலையை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மாநிலத்தில் பரவலாகத் தொழில் பூங்காக்களை உருவாக்கி, நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022-2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக ரூ.75.81 கோடிக்கான காசோலையை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டின் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இக்கழகம், தமிழ்நாடு அரசுக்கு 2022-2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக ரூ.15.17 கோடிக்கான காசோலையை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL)

கரும்பு சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு, செய்தித்தாள், அச்சு, எழுது காகிதம் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தற்போது, இருபுறமும் மேற்பூச்சுச் செய்யப்பட்ட அடுக்குக் காகித அட்டை, உயர்ரக காகித உற்பத்தி எனப் படிப்படியாக விரிவாக்கங்களை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு 2022-2023ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக ரூ.12.22 கோடிக்கான வங்கி வரைவோலையை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்குத் திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவு - 08.11.2023

தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் உரிமைகளைக் காப்பதோடு, தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்பட்டுவரும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு, தொழிலாளர்கள் நலனைக் கண்ணின் இமைபோல் காத்து வருகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தின் வனப் பகுதிகள், பிற பொருத்தமான பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது (TANTEA) 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலும், ஓய்வுபெற்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் பணிக்கொடை, ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும்பொருட்டு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே ரூ.29.38 கோடியினை வழங்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில், 1,093 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, பணி ஓய்விற்குப் பிறகும் தங்களுடைய குடியிருப்புக்களைக் காலி செய்யாத தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நலன் கருதி, நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் ரூ.14 இலட்சம் மதிப்பிலான அடுக்குமாடிக் குடியிருப்புக்கான பயனாளிகளின் பங்களிப்பை அரசே ஏற்க முடிவு செய்து, ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மேற்காணும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு இடம்பெயர ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடியிருப்புகளின் பயனாளிகள் பங்களிப்பாக ரூ.13.46 கோடியை ஒரு சிறப்பு நிகழ்வாக வழங்கிட உத்தரவிட்டுள்ளார். இவற்றின் வாயிலாகத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உறுதி செய்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் தொடர் முயற்சிகள் புலனாகும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நாளொன்றுக்குத் தாங்கள் பெற்றுவரும் தினக்கூலி ரூ.375ஐ, திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்தும் குழுவின்

பரிந்துரையின் அடிப்படையில், தனியார் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, நாளொன்றுக்கு ரூ.438 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும், 03.11.2023 அன்று தங்களைச் சந்தித்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ.ராசா அவர்களிடம் இந்தக் கோரிக்கையையும், நீண்ட காலமாக உள்ள இதர கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டுமெனக் கோரியிருந்தனர்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் மேற்படி கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நிறைவேற்றிட வேண்டுமென்று, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ.ராசா அவர்களும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனியார் தோட்டத் தேயிலைத் தொழிலாளர்களுக்கு இணையாகத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கும், திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.438 வழங்கிடவும், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்திடவும் உத்தரவிட்டுள்ளார். இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.7.78 கோடி ஆகும். அதோடு, TANTEA தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகப் (TANTEA) பணியாளர்களுக்கு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதற்கான ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தாமல் இருந்த நிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், TANTEA பணியாளர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதங்களை நிலுவைத் தொகையுடன் உடனடியாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். இதற்காக TANTEAக்கு கூடுதலாக ரூ.12.78 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். இந்தத் திருத்திய ஊதிய விகிதம் நடைமுறைபடுத்தப்படுவதால் 212 பணியாளர்கள் பயனடைவார்கள்.

படமும்/செய்தியும்

மருது பாண்டியர்கள் நினைவு நாள்

மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் 24.10.2023 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், துணை மேயர் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி எண்.110இன்கீழ் ஆற்றிய உரை—11.10.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், இந்திய மக்களின் பட்டினிச் சாவைத் தடுப்பதற்கும், 1960களில் பசுமைப் புரட்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவரான மறைந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில் விதி எண்.110இன்கீழ் அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

வேட்டைச் சமூகமாக இருந்த மனித இனம் வேளாண் தொழிலைத் தேர்ந்தெடுத்தது என்பது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி என்பதுடன் அறிவியல் வளர்ச்சியின் அடையாளமும் ஆகும். வேளாண் அறிவியலை இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக்காட்டி உலகளவில் புகழ் பெற்றவர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டன. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக்கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து, காலநிலை மாற்றம் குறித்து 1969ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பமாவதால் கடல் மட்டம் உயரும் என்பதையும் 1989ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளப்பரிய அன்பு கொண்டவரான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், தலைவர் கலைஞர் மறைவின்போது மிக உருக்கமான இரங்கற்குறிப்பையும் பதிவு செய்திருந்தார். தன்னுடைய பெயரிலான எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிலம் தந்து உதவியதையும், ஜே.ஆர்.டி. டாடா பெயரிலான சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த திரு. கே.ஆர்.நாராயணன் அவர்களுடன் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்ததையும் நன்றிப் பெருக்குடன் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கான உயிரித் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கியவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதைக் குறிப்பிட்டுள்ள டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், கலைஞரின் ஆட்சி எப்போதும் உழவர்கள் நலன் நாடும்

ஆட்சியாகவே இருந்தது என்பதையும், விஞ்ஞானிகளின் விஞ்ஞானியாக முத்தமிழறிஞர் கலைஞர் திகழ்ந்தார் என்றும் பாராட்டியுள்ளார்.

2021இல் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கிவைக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தபோது, அவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்றைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும், இந்த அரசை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சராகிய என்னையும் அவர் பாராட்டி, வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

பசுமைப் புரட்சியின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், 28.09.2023 அன்று மறைவெய்தியபோது அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியதுடன், அரசின் சார்பில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் இந்திய அளவில் முத்திரை பதித்து, உலகளவில் புகழ் பெற்றவர். பத்மவிபூஷன், ரமோன் மகசசே உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றுள்ள அவரது நினைவைப் போற்றுகிற வண்ணம் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிப்பை வெளியிடுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று அழைக்கப்படும். அதேபோல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம், மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

மாமன்னர் மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 30.10.2023 அன்று, மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் "பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு"

கணித்தமிழ் மாநாடு 2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு - 11.10.2023

தமிழ்நாடு அரசின் 2023 - 2024ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு' நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் 'கணித்தமிழ் 24' மாநாடு நடத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் தமிழின் நிலை குறித்து ஆராய்தல், விவாதித்தல், புதிய சிந்தனைகளை உருவாக்குதல், இளம் திறமைகளை அடையாளம் காணுதல் உள்ளிட்ட இலக்குகளோடு 'பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு' நடத்திட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் 1999இல் 'தமிழ் இணையம் 99' மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது மீண்டும் தமிழ்நாடு அரசு இந்த மாநாட்டை முன்னெடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'தமிழ் இணையம் 99' மாநாட்டின் விளைவாக உருவானதுதான் தமிழ் இணையக் கல்விக்கழகம். உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும், இதழ்களையும், அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகியவை தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முதன்மையான பணிகளாகும். மேலும், மாநாட்டில் பங்குபெற்ற வல்லுநர்களின் வழிகாட்டுதலோடு 'தமிழ்99 விசைப்பலகை' உருவாக்கப்பட்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. தமிழில் மென்பொருட்களை உருவாக்குவது தொடர்பான செயல்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

இந்நிலையில், 'தமிழ் இணையம் 99' மாநாட்டுக்குப் பிறகான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. செயற்கை நுண்ணறிவு குறித்துக் கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடத்தினை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் வழியாக, தொழில்நுட்பத் துறையில் தமிழ் மொழியின் பயன்பாடு அதிகரிப்பதற்கான சூழலை ஏற்படுத்த இயலும். புதிய தலைமுறையை இதன் பக்கம் திருப்ப இயலும்.

தொழில்நுட்பத் துறையில் தமிழைப் பயன்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் தமிழ் இணையக் கல்விக்கழகம், இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை ஒருங்கிணைக்கும். புது யுகத்திற்கு ஏற்றாற்போல் தமிழ் மொழியும், புத்தொளி பெற்று வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு வரும் இயற்கை மொழி ஆய்வு (Natural Language Processing Tools), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரவழிக் கற்றல் (Machine Learning), இயந்திர மொழியாக்கம் (Machine Translation), மெய்ப்பாட்டுப் பகுப்பாய்வு (Sentimental Analysis), பெருந்தரவு மொழி மாதிரி (Large Language Model), தானியக்க குரல் உணர்வு (Automatic Speech Recognition) போன்றவற்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியும் இந்த மாநாட்டின் இலக்காக இருக்கும்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு 2024 பிப்ரவரி 8, 9, 10 ஆகிய நாட்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்திய 'தமிழ் இணையம் 99' மாநாடு நடைபெற்ற அதே நாளில் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு (கணித்தமிழ் 24) கலைஞர் நூற்றாண்டில் நடைபெறவிருப்பது சிறப்பான ஒன்றாகும். தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழுக்காகப் பங்களித்துவரும் அறிஞர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும், தமிழ் ஆர்வலர்களும், இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள். மேலும், மாநாடு தொடர்பான கூடுதல் விவரங்களை https://www.kanitamil.in என்ற இணையதளத்தில் அறியலாம்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு கீழ்க்காணும் அம்சங்களுடன் திட்டமிடப்பட்டுள்ளது:

உரைகள், குழு விவாதங்கள்: தமிழறிஞர்கள், மொழித் தொழில்நுட்ப வல்லுநர்கள், மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்கும், பயன்படுத்தும் நிறுவனங்களைச் சேர்ந்த ஆளுமைகள் ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் விரிவுரை வழங்குவார்கள். ஆளுமைகளுக்கு இடையேயான குழு விவாதங்களும் நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவு, இயந்திரவழிக் கற்றல், இயற்கை மொழிச் செயலாக்கம், மொழி மாதிரிகள், நவீன மொழித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட தலைப்புகளில் உரைகளும், குழு விவாதங்களும் நடைபெறும்.

ஆய்வுக் கட்டுரைகள்: உலகெங்கிலும் கணினித்தமிழ் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வருபவர்களிடமிருந்தும், தமிழ் மொழி மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும், மொழி சார்ந்த மென்பொருள் உருவாக்குவோரிடமிருந்தும் தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு, புத்தகமாகத் தொகுக்கப்படும். இயற்கை மொழிச் செயலாக்கம், இயந்திர மொழிபெயர்ப்பு, பேச்சுகளைப் புரிந்துகொள்ளல், உணர்வுப் பகுப்பாய்வு உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறும்.

நிரலாக்கப் போட்டி: இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் என இரண்டு விதமாக நிரலாக்கப் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டியின் வழியாக இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதல் வழங்கப்படுவதோடு, சிறந்த முயற்சிகளுக்கான அங்கீகாரமும் வழங்கப்படும்.

கண்காட்சி: மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் விதமாகக் கண்காட்சி அமையும். தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் (Startup) நிறுவனத்தினர் ஆகியோர் இதில் பங்கேற்பார்கள்.

தொழில்நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கும் காலம் இது. அதன் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொண்டுவரும் நிகழ்வாக இந்த மாநாடு நடைபெறும். செயற்கை நுண்ணறிவு (AI), அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (LLM), டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம், கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பம், மின் ஆளுமை உள்ளிட்ட தளங்களில் நடைபெறவிருக்கும் இந்தப் பன்னாட்டு மாநாடு அடுத்துவரும் சவாலான தொழில்நுட்ப யுகத்தை எதிர்கொள்வதற்கான அடித்தளங்களை அமைத்துத்தரும். மேலும், இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் கணித்தமிழ் தொடர்பாகநடந்திருக்கும்விவாதங்கள்,முயற்சிகள், முன்னெடுப்புகள் முதலியவற்றை உள்ளடக்கிய சிறப்பு மலர் ஒன்றும், இந்தப் பன்னாட்டு மாநாட்டில் வெளியிடப்படும். இம்மாநாட்டுக்கென பிரத்யேக இலச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள இந்த மாபெரும் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு தமிழ் மொழியைக் காப்பதற்கும், அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக அமையும். இந்தியாவில் வேறெந்த மாநிலமும், மொழிக்காக முன்னெடுக்காத ஒரு திட்டத்தை முன்னோடியாகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ரூ.9.40 கோடி உயரிய ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கி, ஆற்றிய உரை - 12.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.10.2023 அன்று, சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சீன நாட்டின் ஹாங்சோவில் நடைபெற்ற 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 20 வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.9.40 கோடிக்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

கடந்த 23.09.2023 முதல் 08.10.2023 வரை சீன நாட்டின் ஹாங்சோவில் நடைபெற்ற 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 48 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 20 வீரர், வீராங்கனைகள் 9 தங்கம், 11 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் விவரங்கள்

19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த - தடகளப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கங்கள் வென்ற ராஜேஷ் ரமேஷ், 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற சுபா வெங்கடேசன், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்கள் வென்ற வித்யா ராம்ராஜ், டிரிப்பிள் ஜம்ப் போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற பிரவின் சித்ரவேல், துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற பிரதிவிராஜ் தொண்டைமான்;

ஸ்குவாஷ் போட்டிகளில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி பதக்கங்கள் வென்ற சவ்ரவ் கோஷல்,

2 தங்கப் பதக்கங்கள் வென்ற ஹரிந்தர் பால் சிங் சந்து, ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கங்கள் வென்ற அபய் சிங், ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கங்கள் வென்ற தீபிகா பல்லிகல் கார்த்திக், ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற ஜோஷ்னா சின்னப்பா;

டென்னிஸ் போட்டியில் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்ற ராம்குமார் ராமநாதன், ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் தலா ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற வி. ஆனந்த் குமார், ஆர்த்தி கஸ்தூரிராஜ், ஜெ. கார்த்திகா, சதுரங்கப் போட்டியில் தலா ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற டி. குகேஷ், பிரக்ஞானந்தா, ஆர். வைஷாலி, பி. சவிதா ஸ்ரீ, கிரிக்கெட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற சாய் கிஷோர், வாஷிங்டன் சுந்தர் ஆகிய 20 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.9.40 கோடிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துப் பதக்கங்களைப்பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதற்காக நாம் இங்கே கூடி இருக்கிறோம்.

இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு இந்திய விளையாட்டு வீரர்கள் பல்வேறு பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அதிக பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியா மொத்தமாக வென்ற 107 பதக்கங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் மட்டும் 28 பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்திய அளவில் பார்த்தால் நமது மாநிலம் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பல்வேறு பதக்கங்களை வென்ற 20 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.9.40 கோடி உயரிய ஊக்கத்தொகை பரிசுகள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அகில இந்திய அளவிலே, உலகளவிலான போட்டிகளில் தொடர்ந்து உங்களது பங்களிப்பை செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ச்சியான பதக்கங்கள் பெறுவதும், தொடர்

வெற்றிகளைப் பெறுவதும்தான் உங்களுக்கும் பெருமை; நமது தமிழ்நாட்டுக்கும் பெருமை; ஏன் இந்தியாவிற்கே பெருமை!

இந்தப் பாராட்டு உங்களுக்கும் உங்களது வெற்றிக்கும் மட்டுமல்ல; நீங்கள் இன்னும் பல வெற்றிகளைப் பெறவேண்டும் என்று ஊக்கமளிக்கவும் - உங்களைப்போல இன்னும் பல வீரர்கள் உருவாக அடித்தளமாக அமையவேண்டும் என்பதற்காகவும்தான். உங்களைப்பார்த்து இன்னும் ஏராளமான வீரர்களும், வீராங்கனைகளும் உருவாவார்கள் என நம்புகிறேன்.

எந்தவொரு அரசாக இருந்தாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஒரு சில துறைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தும். ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசானது, அனைத்துத் துறைகளிலும், அதிக கவனம் செலுத்துவதன் மூலமாக, அனைத்துத் துறைகளையும் ஒருசேர வளர்த்து வந்துகொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சில துறைகள் ஸ்டார் துறைகளாக வளர்ந்து வருகின்றன. அதில் விளையாட்டுத் துறையும் ஒன்று!

இந்தத்துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்தத் துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத்துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது. நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி அவர்கள் நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார்.

அந்தத்துறையின் கேப்டனாக இருந்து, அனைத்துவகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக்கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும், அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்தத் துறை உலகமே வியந்து பார்க்கும் பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. அதில் மிக முக்கியமானது 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி. இனி யாரும் இப்படி நடத்த முடியாது என்று சொல்லத்தக்க வகையில், மெச்சத்தக்க வகையில் மிகக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக நடத்தி முடித்துக் காட்டினோம்.

அதேபோல், இந்த இரண்டு ஆண்டுகளில், பன்னாட்டு, தேசிய அளவில் பதக்கங்கள் வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித்தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,864 விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம்

ரூ.52.82 கோடி மதிப்பிலான உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

'முதலமைச்சர் கோப்பை' என்ற பெயரில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்களுக்கு மாவட்டம், மாநில அளவில் சிலம்பம், கபடி, கால்பந்து, கூடைப்பந்து உள்ளிட்ட 15 வகையான போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இதில், மாவட்ட - மண்டல அளவில் இந்த ஆண்டு ஏறக்குறைய 3 இலட்சத்து 71 ஆயிரம் வீரர்கள் பங்கேற்றனர். மண்டல அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 54 வீரர் - வீராங்கனைகள் பங்கெடுத்தார்கள். இந்த முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கு ரூ.50.86 கோடி ஒதுக்கீடு செய்தோம். இதில் பரிசுத்தொகை மட்டும் ரூ.28.30 கோடி.

மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள், கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'Tamil Nadu Champions Foundation' என்கிற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களும், இதர அமைப்புகளும் அளிக்கும் கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு நிதிகளை ஒன்றுதிரட்டி இதனைச் செய்யலாம். இதன்மூலம் நம் மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் 13 முதல் ஜூன் 17 வரை ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். இந்தப் போட்டியில் ஜப்பான், மலேசியா, ஹாங்காங், தென்னாப்பிரிக்கா, எகிப்து, ஆஸ்திரேலியா, கொலம்பியா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உலகின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்கள் கலந்துகொண்டனர்.

தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023 நமது மாநிலத்தில் நடைபெற உள்ளது. விளையாட்டு உள்கட்டமைப்பில் அரசு அதிநவீன கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. சென்னையில் விளையாட்டு நகரம் அமைக்கப்பட உள்ளது.

ஒலிம்பிக், சர்வதேச விளையாட்டுக்களில், விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகச் சென்னை, மதுரை, திருச்சி, நீலகிரியில் ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள கிராமங்களில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ளது. சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கங்களை அரசு அமைத்து வருகின்றன.

ஒருபுறம் துவக்கநிலையில் உள்ள விளையாட்டு வீரர்களையும், மறுபுறத்தில் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களையும் ஊக்குவிக்க நமது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போலவே, விளையாட்டு மீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும், விளையாட்டுத்துறை அதிகாரிகளையும், நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டிகளில் கலந்துகொள்வது, விளையாடுவது என்பது உடல் வலிமையும், உள்ள வலிமையும் தொடர்புடையது! படிக்கும் காலத்தில் மாணவ, மாணவியர் அனைவரும் ஏதாவது ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து அதில் பங்கெடுக்கும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும்.

'அறிவை விரிவு செய்' என்பதைப்போலவே, 'உடலை உறுதி செய்' என்பதும் நமது முன்னெடுப்பாக இருக்க வேண்டும். அறிவை விரிவு செய்ய பள்ளி, கல்லூரி அளவில் ஏராளமான முன்னெடுப்புகளைச் செய்து வருகிறோம். அதேபோல் உடலை உறுதிசெய்ய அதற்கான முன்னெடுப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை செய்ய வேண்டும்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்றும் கேட்டு, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும், மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாற்றுத்திறனாளிகளுக்கான “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு “உலகளாவிய வடிவமைப்பு” விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம், 12.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று, புதுதில்லியில் நடைபெற்ற “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முதன்மைச்செயலாளர் (மு.கூ.பொ) திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள “அனைத்தும் சாத்தியம்” என்ற மாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 06.06.2022 அன்று திறந்து வைத்தார்.

“அனைத்தும் சாத்தியம்” என்ற அருங்காட்சியகமானது மாற்றுத்திறனாளிகள் உபயோகப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட உதவி உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொருட்கள் அங்கு வருகை புரிபவர்களுக்கு அவர்கள் தன்னிச்சையாக வாழ்வதற்கு ஏதுவாக காட்சிப்பொருட்களாக வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அருங்காட்சியகத்தில் மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இல்லம், வேலை செய்யும் இடத்தில் தேவைப்படும் உபகரணங்கள், அவர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு, ஓய்வு நேரங்களில் பயன்படுத்தும் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்குப் புதுதில்லியில் 28.09.2023 அன்று, Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட விருதினை, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகள் அருங்காட்சியகத்தின் ஒருங்கிணைப்பாளர்களுடன் பெற்றுக்கொண்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க
"நீலகிரி வரையாடு திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 12.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகங்களை வழங்கினார்.

"வரையாடு" என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் "நீலகிரி வரையாடு" என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும். இது புவிஈர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின்மீது ஏறும் திறன்களுக்காகப் புகழ் பெற்றது. இந்த மலை ஆடுகளை "மவுண்டன் மோனார்க்" என்று அழைக்கிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ்ச் சங்க இலக்கியங்களில் நீலகிரி வரையாட்டைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தின் ஐம்பெரும் காப்பியங்களில், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணியில், நீலகிரி வரையாடு, அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், பதினெண்மேல்கணக்கு நூல்களான நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை போன்ற நூல்களில் நீலகிரி வரையாடு பற்றி விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி 1600-1700இல் திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகத்தில் நீலகிரி வரையாடு குறித்துக் "குறத்தி மலை வளம் கூறல்" என்ற பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது, வரையாடு இப்பகுதியின் பல்லுயிர்ச் செழுமையைக் குறிக்கும் விலங்குகளில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அதன் சுற்றுச்சூழல், கலாச்சார முக்கியத்துவத்திற்கு சான்றாக, நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி வரையாடு திட்டமானது, நீலகிரி வரையாடு பற்றிய எண்ணிக்கை, விநியோகம், சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை

உருவாக்குதல்; நீலகிரி வரையாட்டின் வரலாற்று வாழ்விடங்களை மீண்டும் அறிமுகப்படுத்துதல்; நீலகிரி வரையாட்டிற்கு உள்ள அச்சுறுத்தலை நிவர்த்தி செய்தல்; "நீலகிரி வரையாடு" இனங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே அதிகரிக்கச் செய்தல்; நீலகிரி வரையாடு தினம் - 1975இல் நீலகிரி வரையாடு பற்றிய முதல் ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த டாக்டர் ஈ.ஆர்.சி டேவிதாரின் பிறந்த நாளான அக்டோபர் 7ஆம் நாள் நீலகிரி வரையாடு தினமாக அவரைச் சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது; "நீலகிரி வரையாடு" உள்ள

தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சுற்றுச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை உருவாக்குதல்; பள்ளி மாணவர்களுக்கு நீலகிரி வரையாடு குறித்த பாடங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் குறிக்கும் வகையில் டிசம்பர், 2022இல் அரசாணை வெளியிடப்பட்டது.

இந்தத் திட்டம் ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல், சூழலியியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், வரையாடுகளின் வரம்பு முழுவதும் தரப்படுத்தப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் நடத்துதல், நீலகிரி வரையாட்டினை மறு அறிமுகம் செய்தல், கண்காணிப்பு, பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு நோய் கண்டறிதல், சிகிச்சை அளித்தல், பணியாளர்களுக்கு கள உபகரணங்கள், பயிற்சி அளித்தல், மேல் பவானியில் உள்ள சோலா புல்வெளியில் முன்னோடியான மறுசீரமைப்புப் பணி மேற்கொள்ளுதல், சூழல் - சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல், தகவல் தொடர்பு, எல்லை போன்றவை குறித்த முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும்.

நீலகிரி வரையாடு திட்டப்பணிகளைச் செயல்படுத்தத் திட்ட அலுவலகம், கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முழு நேர முதல் திட்ட இயக்குனரையும், அரசு நியமித்து ஆணை வெளியிட்டு, பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்களையும், ஒரு மூத்த விஞ்ஞானியையும் நியமனம் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கான விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் விருதுகளைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள்—12.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை, 12.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் சந்தித்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மே 2021 முதல் இதுநாள்வரை வழங்கப்பட்ட விருதுகளைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

மே 2021 முதல் இதுநாள்வரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையால் பெறப்பட்ட விருதுகளின் விவரங்கள்

13.12.2021 அன்று உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்புத் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற தேசிய அளவிலான நிகழ்ச்சியில், நாட்டிலேயே அதிகபட்சமாக 22 தொற்றா நோய்களுக்கான 29,88,110 பரிசோதனைகள் மேற்கொண்டதற்காகவும், பிரச்சாரத்தின் போது அதிக எண்ணிக்கையிலான 85,514 ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதில் மூன்றாவது இடத்தைப் பெற்றதற்காகவும், தமிழ்நாடு இரண்டு விருதுகளை வென்றுள்ளது.

24.03.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலகக் காசநோய் தினத்தில், காசநோயின் பாதிப்பை 40 விழுக்காடு குறைத்ததற்காக நீலகிரி மாவட்டத்திற்கு வெள்ளிப் பதக்கமும், காசநோயின் பாதிப்பை 20 விழுக்காடு குறைத்ததற்காக விழுப்புரம், சிவகங்கை, கன்னியாகுமரி, நாமக்கல், நாகப்பட்டினம், கரூர் ஆகிய 6 மாவட்டங்களுக்கு வெண்கலப் பதக்கமும் ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.

07.06.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்புத் தினத்தையொட்டி நிகழ்ச்சியில், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம், மனிதவளம், நிறுவனங்களைப்பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவுப் பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு, கண்காணிப்பு, பயிற்சி, திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்ததில், 2021-2022ஆம் ஆண்டிற்கான

செயல்பாட்டில் **இந்திய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத்** தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதினைப் பெற்றுள்ளது.

07.06.2022 அன்று, புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவுப் பாதுகாப்புத் தினத்தையொட்டி நிகழ்ச்சியில், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட உணவு வணிகங்களுக்கான உரிமம் / பதிவுச்சான்று வழங்குதல், உணவு மாதிரிகள் எடுத்துக் கண்காணித்தல், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குவது குறித்து தர மதிப்பீடு செய்தல், சான்று வழங்குதல், தரமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுப் பழக்கத்தை ஏற்படுத்துதல், உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தொடர்பாக உண்ணத் தகுந்த உணவு குறித்த போட்டியில் (Eat Right Challenge) இந்தியா முழுவதும் 150 மாவட்டங்கள் பங்கேற்றதில், 75 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினைப் பெற்றுள்ளன.

27.07.2022 அன்று ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் புதுடெல்லியில் நடத்திய தேசியக் குடும்பக் கட்டுப்பாடு உச்சிமாநாட்டில், தமிழ்நாட்டில் பெண்களுக்கான பேறுகாலத்திற்குப் பின் பொருத்தப்படும் தற்காலிக நவீனக் கருத்தடை சாதனம் தொடர்பான சாதனையில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக விருது வழங்கப்பட்டது.

28.07.2022 அன்று கர்ப்பிணிப் பெண்களுக்கான ஹெப்படைடிஸ்-பி பரிசோதனைகளுக்கான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளுக்காக 2021-2022ஆம் ஆண்டிற்கான விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது.

09.09.2022 அன்று அரசு சமுதாய சுகாதார மையங்கள் பிரிவின் தேசியத் தர உறுதி நிர்ணய திட்டத்தை (NQAS) தமிழ்நாட்டில் 250 அரசு சமுதாய சுகாதார மையங்களில் செயல்படுத்தியதற்காகத் தேசிய அளவில் முதல் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

09.09.2022 அன்று அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, அரசு துணை மாவட்ட மருத்துவமனை பிரிவின்கீழ், தமிழ்நாட்டில் 100 அரசு மருத்துவமனைகளுக்குமேல் தேசியத் தர உறுதி நிர்ணய திட்டம் (NQAS) செயல்படுத்தியதற்காகத் தேசிய அளவிலான இரண்டாம் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

10.12.2022 அன்று உத்திரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெற்ற "அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்" தின நிகழ்ச்சியில், அனைவருக்கும் நலவாழ்வு மையங்கள் மூலம் 12.10.2022 முதல் 08.12.2022 வரை 22,58,739, தொலைத் தொடர்பு மருத்துவ ஆலோசனைகள் வழங்கி இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடமும், கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவச் சேவையை (Tele Consultation) செயல்படுத்தியதில், பெரிய மாநிலங்களில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடமும், பெற்றதற்காகப் பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.12.2022 அன்று பிரதான் மந்திரி சுரஷத் மாத்ரித்வா அபியான் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தி மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக, ஒன்றிய அரசின் விருது வழங்கப்பட்டது.

16.12.2022 அன்று சுரஷத் மாத்ரித்வா ஆஷ்வாசன் திட்டம் (சுமன்) செயல்படுத்தப்பட்டதற்காகத் தமிழ்நாட்டிற்கு இரண்டாம் இடமும், தடுக்கக்கூடிய மகப்பேறு இறப்புகளைத் தவிர்த்தலில் பெரிய மாநிலங்களுக்கான குறியீட்டில், இரண்டாம் இடமும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் விருதினை (SKOCH Award) 128 அரசு மருத்துவ நிலையங்களில் டயாலிசிஸ் சேவையை வழங்கி வருவதற்காக தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.01.2023 அன்று ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் மாதவிடாய்க் கால தன் சுத்த திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காக, மிகச்சிறந்த மாதவிடாய்க் கால தன் சுத்த இயக்க விருதினைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

16.01.2023 அன்று, ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம், 16.01.2023, 17.01.2023 ஆகிய நாட்களில் நடத்திய பள்ளிகள் சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் தூதுவர்கள்

திட்டத்திற்கான கருத்தரங்கில் தேசிய இளம் சிறார் நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காக தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

24.03.2023 அன்று உத்தரப் பிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காசநோய் இல்லாத நிலையை நோக்கி முன்னேறி வருவதற்காக 2022ஆம் ஆண்டிற்கான தங்கப் பதக்கங்கள் திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களுக்கும், வெள்ளிப் பதக்கங்கள் மதுரை, தூத்துக்குடி, கரூர், கன்னியாகுமரி, திருவண்ணாமலை மாவட்டங்களுக்கும், வெண்கலப் பதக்கம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும், ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்டன. மேலும், நிலையான வளர்ச்சி இலக்குக் கட்டமைப்பின்படி 2015 முதல் காசநோய் பாதிப்பு 80 சதவிகிதம் குறைப்பு முயற்சியின்கீழ், 2022ஆம் ஆண்டிற்கான காசநோய் இல்லாத மாவட்டமாக நீலகிரி மாவட்டம் அறிவிக்கப்பட்டு, தேசிய அளவில் விருது வழங்கப்பட்டது.

07.06.2023 அன்று, புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு பாதுகாப்புத் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம், மனிதவளம், நிறுவனங்களைப்பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பும், கண்காணிப்பு, பயிற்சி, திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்ததில், 2022-2023ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதினைப் பெற்றுள்ளது.

07.06.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவுப் பாதுகாப்புத் தினத்தையொட்டி நிகழ்ச்சியில், உணவு வணிகங்களுக்கான உரிமம் / பதிவுச் சான்று வழங்குதல், உணவு மாதிரிகள் எடுத்து கண்காணித்தல், பாதுகாப்பான, ஆரோக்கியமான உணவு வழங்குவது குறித்து தர மதிப்பீடு செய்தல், சான்று வழங்குதல், தரமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுப் பழக்கத்தை ஏற்படுத்துதல், உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தொடர்பாக இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட 2022-2023ஆம் ஆண்டிற்கான Eat Right Challenge போட்டியில் இந்திய அளவில் 260 மாவட்டங்கள் கலந்துகொண்டதில், வெற்றி பெற்றது எனத் தேர்வு செய்யப்பட்ட 31 மாவட்டங்களில் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பெரம்பலூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருவள்ளூர், திருப்பூர், சிவகங்கை, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய 13 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதுகளைப் பெற்றன. இப்போட்டியில், கோயம்புத்தூர் மாவட்டம் இந்திய அளவில் முதலிடம் பிடித்தது.

03.08.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற 13ஆவது தேசிய உறுப்புக் கொடைத் தினத்தில், தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று சிசிக்சை நிறுவனத்தால், உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் சிறந்த செயல்பாட்டிற்கான இந்திய அளவில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விருதினைப் பெற்றது.

தேசியச் சுகாதார ஆணையம் ஆயுஷ்மான் பாரத் – பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் திட்டத்தின் பயணத்தில் இவ்வாண்டு செப்டம்பர் 25, 26 ஆகிய தேதிகளில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஆயுஷ்மான் பாரத் – பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டத்தில் சிறந்த சேவை புரிந்தமைக்காக 24 மாநிலங்களிலிருந்து 70 கருத்துருக்கள் பெறப்பட்டதில், 5 கருத்துருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்தில் 2022ஆம் ஆண்டில் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் மொத்த காப்பீட்டுச் சிகிச்சைத் தொகையில் 50 விழுக்காடு ஈட்டியுள்ளன. இந்தத் தொகையை முழுமையாக அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்துவதற்காகவும், உயர் சிறப்பு அறுவை சிகிச்சைகளைத் தொகுப்பு நிதியின் மூலம் செய்வதற்காகவும், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு அரசு நிதியைத் திறம்பட பயன்படுத்தியதற்காகத் தமிழ்நாட்டிற்கு விருது வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது.

10.10.2023 அன்று புதுதில்லியில் ஒன்றிய அரசின் மருத்துவம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் உலக மனநல நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், நட்புடன் உங்களோடு மனநலச் சேவை – தொலைபேசி வழி மனநலச் சேவை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றமைக்காக விருது வழங்கப்பட்டது.

சென்னையில் மக்களின் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான 15.10.2023 அன்று, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதியதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச்சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 15.10.2023

அந்த வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறை மானியக் கோரிக்கையில், இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள், மாணவர்களுக்கு பெரும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15ஆம் நாள், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் திரு.ஜைனுலாப்தீன், திருமதி ஆஷியம்மா ஆகியோருக்கு மகனாக டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பிறந்தார்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், இராமேஸ்வரத்தில் பள்ளிப்படிப்பை முடித்து, திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பட்டப்படிப்புப் பயின்றார். 1955ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பைச் சென்னையிலுள்ள எம்.ஐ.டியில் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர் அதே கல்லூரியில், முதுகலைப் பட்டமும் பெற்றார்.

ஒன்றிய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி அபிவிருத்திப் பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர், இந்திய விண்வெளிஆராய்ச்சிக்கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து, துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கியப் பங்காற்றினார். மேலும், SLV-III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார்.

அவரது இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு 1981ஆம் ஆண்டு இந்தியாவின் பெருமைமிகு விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பல பணிகளைச் சிறப்பாகச் செய்த இவர், 1998ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கியப் பங்காற்றியுள்ளார். "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" என்றும் "அணுசக்தி நாயகன்" என்றும் அவர் போற்றப்பட்டார்.

இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராக ஜூலை 25ஆம் நாள் 2002இல் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பதவியேற்றார். 2007ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்ட டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், "கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக்கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்" என்று மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் அக்னி சிறகுகள், இந்தியா 2020 போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். மேலும், 1990ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருது, 1997ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது போன்ற பல்வேறு விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில், சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில்பு தியதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச்சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்த் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்கான நிதி ரூ.2,697 கோடியினை உடனடியாக விடுவிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கடிதம் – 26.10.2023

தமிழ்நாட்டில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில்கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.10.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது, கிராமப்புறங்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும், வேலைவாய்ப்பை வழங்குவதற்கான முக்கியமான திட்டங்களில் ஒன்று என்பதையும், இந்தத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதோடு, கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்திட ஏதுவான நீடித்த, நிலையான கிராமப்புற சொத்துக்களை உருவாக்கிடும், கிராமப்புற மக்களின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்திடும் ஒரே திட்டமாகும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில், பல்வேறு அளவுகோல்களின்கீழ்த் தமிழ்நாடு எப்போதும் சிறந்த மாநிலமாகத் திகழ்வதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 92.86 இலட்சம் குடும்பங்களுக்குப் பணி அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில், 76.15 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 91.52 இலட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும், புள்ளிவிவரங்களுடன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் விவசாயம், தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையில், இவற்றில் மாறுபாடுகள் ஏற்படும் சூழலில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்கு அதிக தேவை ஏற்படுவதாகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், கிராமப்புறங்களில் உள்ள முதியோர்கள், ஆதரவற்ற பெண்கள், குடும்பத் தலைவிகள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு முக்கியமானதொரு வாழ்வாதாரமாகவும், குறிப்பாக விவசாயம் நலிவடைந்த பருவத்தில், கிராமப்புறங்களில் உள்ள பலருக்குக் கூடுதல் வாழ்வாதார வாய்ப்பாகவும் கருதப்படுகிறது என்று தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதாலும், அவர்களின் வங்கிக் கணக்கில் ஊதியம் வரவு வைக்கப்படுவதாலும், அவர்களின் நிதிநிலை மற்றும் வாழ்வாதாரம் பெரிதும் மேம்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில், 2023-2024ஆம் ஆண்டில் 40 கோடி மனித நாட்கள் தேவைப்படும்

நிலையில், இதுவரை, 28 கோடி மனித நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், 23.10.2023 வரை, 66.26 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 76.06 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியதன்மூலம், தமிழ்நாடு 31.15 கோடி மனித நாட்களை எட்டியுள்ளதாகவும், தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2023-2024ஆம் நிதியாண்டில், 19.07.2023 வரை, தொழிலாளர்களுக்கு திறன்சாரா ஊதியத்திற்காக ரூ.4,903.25 கோடியை ஒன்றிய அரசு விடுவித்துள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து 25.09.2023 அன்று ரூ.1,755.43 கோடி திறன்சாரா ஊதியம் வழங்குவதற்காக ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எனினும் அனுமதிக்கப்பட்ட தொகையில் ரூ.418.23 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள ரூ.1,337.20 கோடி, தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்று தெரிய வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதோடு, அதற்குப்பிறகான வாரங்களுக்கான ஊதியத்திற்கான ரூ.1,359.57 கோடி நிலுவைத் தொகையும் இன்னும் வழங்கப்படவில்லை என்றும், 20.10.2023 நிலவரப்படி, தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் ஊதிய நிலுவை ரூ.2,696.77 கோடி என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் ஒரு பகுதியாக, கடந்த 17.10.2023 அன்று, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தான் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, வரவிருக்கும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில்கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தம்மிடம் கோரிக்கை விடுத்ததாகவும், இதேபோன்ற கோரிக்கை திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுப் பயணத்தின்போதும், தமக்கு வந்ததாகவும், தனது கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,696.77 கோடி மொத்த ஊதிய நிலுவைக்கான தொகையினை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளதோடு, திறன்சாராத் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து கூடுதல் நிதி விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

படமும் / செய்தியும்

நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவின்கீழ் 1,000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவின்கீழ் முதல் நிலை குடிமைப் பணிகளுக்கானத் தேர்வில் (UPSC) கலந்துகொள்ளும் 1,000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை சென்னை, கலைவாணர் அரங்கில் 14.10.2023 அன்று வழங்கினார்.

சமூக வலைதளப் பதிவு

tndiprnews

DIPR TN

tndipr

TN DIPR

www.dipr.tn.gov.in

அக்டோபர் 13:
விருதுநகர் சங்கரலிங்கனார்
நினைவுநாள்!

"தியாகிக்குத் தலை வணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்!"

"வீரத்தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாக சுபாவத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலை வணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்!" - என்றார் பேரறிஞர் அண்ணா!

தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ள மட்டும் சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவுகூரப்படுவார்!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 13.10.2023

தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு 'முதலீட்டு ஊக்குவிப்பு விருது-2023'

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா. அமைப்பின் மதிப்புமிகு 'முதலீட்டு ஊக்குவிப்பு விருது-2023'-ஐப் பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி (Guidance TN) நிறுவனத்திற்கு என் பாராட்டுக்கள்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதுமையான அணுகுமுறைகளும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அர்ப்பணிப்பும், உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை. அவை பசுமையான எதிர்காலத்துக்கான நமது திராவிட மாடல் அரசின் உறுதியான ஈடுபாட்டைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றன. இந்தப் பெருமைமிகு மைல்கல்லை அடைந்ததற்காக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் திரு. விஷ்ணு, ஐ.ஏ.எஸ்., மற்றும் கடுமையாக உழைத்து வரும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 18.10.2023

சமூக வலைதளப் பதிவு

மான மறவர் மருதிருவரின் புகழ் ஓங்குக!

தமிழ் நிலத்தின் உரிமைகளைக் காக்கத் தங்கள் உயிரையும் துச்சமென நினைத்த மான மறவர் மருதிருவரின் புகழ் ஓங்குக!

*சின்ன மருதும், பெரிய மருதும் பீரங்கிகளுக்கு முன்னால் வளரியால் வாகை சூடியவர்கள். இவர்கள் வைத்திருந்த வளரிக்கு முன்னால் பீரங்கிகள் சரியும் என்று எழுதினான் பிரிட்டிஷ் அதிகாரி கர்னல் வெல்ஷ்! இது 1801ஆம் ஆண்டு!

*கழக அரசு அமைந்ததும் மருது சகோதரர்கள் சிலையைச் சென்னையில் அமைக்க ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சிலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கலைஞர் கைவண்ணத்தில் 'தென்பாண்டிச் சிங்கம்' எனக் கலை வடிவம் பெற்று, வாளுக்குவேலி வழியாகக் காலத்தால் அழியாத காவியமாக அவர்களது கதை நிலைத்திருக்கிறது.

தி.மு.கழக அரசு அமையும்போதெல்லாம் விடுதலை வீரர்களின் புகழ் திக்கெட்டும் போற்றப்படுகிறது.

நஞ்சு தோய்ந்த எண்ணங்களோடு நயமாகப் பேசும் திடீர் குபீர் நாட்டுப்பற்றாளர்களின் வரலாற்றைத் தேசத் தந்தை காந்தியாரின் இறுதி நாட்கள் சொல்லும்!

இந்த கோட்சே கூட்டத்தைத்தான் மகாகவி பாரதியார் 'நடிப்புச் சுதேசிகள்' எனப் பாடினார்.

- மருதுபாண்டியர்கள் நினைவுநாளையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 24.10.2023

"சுகாதார நடைபாதைத் திட்டம்"

நீரிழிவு நோயும், இரத்த அழுத்தமும் இந்தியர்களைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன. இதற்கு ஆரம்பக்கட்ட தீர்வாக மருத்துவ உலகம் முன்வைப்பது முறையான நடைப்பயிற்சியும் உடற்பயிற்சியும் தான்.

எனவே, அனைத்து மாவட்டங்களிலும் நமது அரசு தொடங்கியுள்ள நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதைத் (Health Walk) திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

நடப்போம் நலம் பெறுவோம்!

- 8 கி.மீ. சுகாதார நடைபாதை (Health Walk) திட்டம்
தொடங்கி வைக்கப்பட்டது குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 04.11.2023

மாற்றுத்திறனாளிகளுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.1,773 கோடி மதிப்பில் “உரிமைகள் திட்டம்”

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 16.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமையில் 16.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது தலைமையுரையில், மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கான ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் கையெழுத்திட்டு, ஒன்றிய அரசு மேற்கொண்ட தீர்மானத்தினை நிறைவேற்றும் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதைத் தெரிவித்து, அதற்காகத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள்.

குறிப்பாக, மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆரம்பப் பயிற்சி மூலம் தடுப்பு நடவடிக்கைகள், சிறப்புக்கல்வி மேம்பாட்டிற்கான உதவித்தொகை இரட்டிப்பாக்குதல், தன்னார்வத் தொண்டு நிறுவன பணியாளர்களுக்கு மதிப்பூதியம் உயர்த்தி வழங்குதல், 4 விழுக்காடு இட ஒதுக்கீடு மூலம் பணியிடங்கள் நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளுதல், அரசுப் பொது கட்டடங்களில் தடையற்ற சூழலை ஏற்படுத்துதல், மனநலம் பாதிப்படைந்த பெண்களுக்கான

பாதுகாப்பினை உறுதி செய்தல், மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தல், மகளிர் உரிமைத்தொகை வழங்குதல், உலக வங்கி உதவியுடன் செயல்பட்டு வரும் "உரிமைகள் திட்டம்", செயல்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து வாரிய உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவிக்கும் நிகழ்வில், மனநலம் பாதிப்படைந்தோருக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கும் முறையினை முறைப்படுத்துதல், செவித்திறன் பாதிப்படைந்தோருக்கு நிரந்தரச் சான்றிதழ் வழங்குதல், சிறப்புக்கல்வி மேம்பாடு, பத்து வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டருக்கு மாற்றாக மீண்டும் தேவைப்படுவோருக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குதல், முதுகுத் தண்டுவடம் பாதிப்படைந்தோருக்கு மறுவாழ்வுச் சேவை கிடைக்கப் பெறுதல், **"உரிமைகள் திட்டத்தை"** அனைத்து பின்தங்கிய மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்துதல், மனவளர்ச்சிக் குன்றியோருக்குத் தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் உறுப்பினர்களால் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மாற்றுத்திறனாளிகள் என்று பெயரிட்டு, அவர்களுக்கெனத் தனித் துறையையும் உருவாக்கி, விளிம்புநிலை மக்களான அவர்களது வாழ்வில் விளக்கேற்றியது நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு.

நம்முடைய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் அரசாக, அவர்களது நலன் பேணும் அரசாக, அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் அரசாகச் செயல்பட்டு வருகிறது.

அதனால், "ஒரே ஒரு மாற்றுத்திறனாளிகூட மன வருத்தம் அடைந்துவிடக் கூடாது; ஒரே ஒருவருக்கு நன்மை அளிக்கும் என்றாலும் அந்தச் செயலை நாம் செய்தாக வேண்டும்" என்று முன்பு நடந்த கூட்டத்தில் நான் குறிப்பிட்டதை மீண்டும் இப்போது தொடக்கத்திலேயே நினைவூட்ட விரும்புகிறேன்.

நமது நாடு, ஐக்கிய நாடுகள் சபையில் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளை காப்பதற்கான ஒப்பந்தத்தில் (UNCRPD) கையெழுத்திட்டு இருப்பதின் அடிப்படையிலும், நமது அரசின் குறிக்கோள்களான அனைத்துயிர்களும் ஒன்று - எல்லோர்க்கும் எல்லாம் என்ற அடிப்படையிலும், செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு சில திட்டங்களை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

★ மாற்றுத்திறனாளிகளுக்கு 4 விழுக்காடு இடஒதுக்கீட்டின்கீழ், அரசுத்துறைகளில் உள்ள பின்னடைவு காலிப்பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதனை பயிற்சிகளின் மூலம் கட்டுப்படுத்தும் 92 மையங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மையங்களில் சேவை புரியும் பணியாளர்களுக்கு, மதிப்பூதியம் உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

★ மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச, கட்டாயக் கல்வியினை வழங்குவதற்காக 22 சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் அரசுச் சாரா நிறுவனங்களுக்கு மானியம் வழங்கியும், சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அங்குப் பயிலும் மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி இருக்கிறோம்.

★ உயர்கல்வி பயிலும், 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில், ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

★ UPSC, TNPSC நடத்தும் தொகுதி 1 முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு முதன்மைத் தேர்வு எழுத தலா ரூ.50,000 ஊக்கத்தொகை.

★ உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு 5 விழுக்காடு ஒதுக்கீடு வழங்க ஆணை.

★ தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் பெறும் மாற்றுத்திறனாளிகள் உரிய சமயத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது, கடனுக்கான வட்டி தொகையை மாநில அரசே செலுத்துகிறது.

தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டு, 14,271 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.64 கோடி செலவில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சிறு, குறு தொழில் மற்றும் பெட்டிக்கடை தொடங்க விரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000 அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு என, இவற்றில் எது குறைவான தொகையோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

★ மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் ஐந்து வகையான மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித்தொகை ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ வருவாய்த் துறையின்கீழ் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகை ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ இத்துடன் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளி குடும்பத் தலைவிப் பெண்களுக்கு ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

★ ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இப்படி வரிசையாகச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

★ மாற்றுத்திறனாளிகளின் கண்ணியம், தனிப்பட்ட சுதந்திரம், சுயமாக முடிவெடுக்கும் உரிமைகள் ஆகியவற்றினை ஊக்குவிக்கும் விதமாகத் தனியே மாநில ஆணையரகம் மூலம் வழக்குகளில் தீர்வு கண்டும்,

★ மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ளூர் மட்டக் குழு அமைத்துப் "பாதுகாவலர் சான்றிதழ்" வழங்கியும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

★ மனநலம் பாதிப்படைந்தவர்களின் நலனுக்காக, "இடைநிலைப் பராமரிப்பு மையம்", "மீண்டும் இல்லம்" என்னும் புதிய திட்டத்தினை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு ஆதரவற்ற நிலையில் உள்ள மனநலம் பாதிப்படைந்த பெண்கள் மீண்டும் சமுதாயத்தில் தன்னிச்சையாக வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ மனநலம் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மூன்று இல்லங்கள் திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி, இதர உதவித் தொகைகள் உயர்த்தி, வழங்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்குத் தடையற்ற சூழல் அமைக்கும் நடவடிக்கையாகப் புதிய கட்டடங்கள் அனைத்திலும், மின்தூக்கி, சாய்வுதளப் பாதைகளை அமைத்திடவும், மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு உகந்த கழிவறைகள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தடையற்ற சூழல் அமைப்பதற்கான வழிகாட்டுதல்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சிகள் மாவட்ட அளவிலும் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சைகை மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அரசுக் கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதற்காக ரூ.15 இலட்சம் செலவில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தடையற்ற சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிக்க மாநில விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தடையற்ற சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் அரசின் முன்னெடுப்பு நடவடிக்கையாக, மாற்றுத்திறனாளிகள் இயக்குநரக வளாகத்தில் "அனைத்தும் சாத்தியம்" அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

இந்தச் சிறப்பு முயற்சியினைப் பாராட்டி, புதுதில்லியில் நடைபெற்ற 'எம்பசிஸ்' விழாவில் "மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால்" 2023ஆம் ஆண்டிற்கான "உலகளாவிய வடிவமைப்பு விருது", "அனைத்தும் சாத்தியம்" அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு, பொழுதுபோக்கு, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் தடையில்லாமல் மேற்கொள்ளும் நடவடிக்கையாகச் சென்னை மெரினா கடற்கரை, தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை ஆகியவற்றை மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க வகையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் தங்கும் இருப்பிடங்களிலும் தடையற்ற சூழல் அமைய மாவட்ட அளவில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கரூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் "விடியல் வீடு" என்னும் திட்டம், முன்னோடித் திட்டமாக மாவட்ட நிருவாகத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகளில் தரைத்தளத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் "உரிமைகள் திட்டம்" ரூ.1,773 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உட்கோட்ட அளவிலும் ஒருங்கிணைந்த சேவை மையம் அமைத்து மறுவாழ்வு நிபுணர்கள் மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்குச் சமூக பாதுகாப்பு, ஒருங்கிணைந்த மறுவாழ்வுச் சேவைகள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் உட்கோட்ட அளவில் 12 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைப்பதற்கானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களை எல்லாம் எவ்வாறு மேலும் சிறப்பாகச் செயல்படுத்தலாம் என்பதை இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசித்து, உறுப்பினர்கள் அரசுக்குப் பரிந்துரைக்கும் கருத்துக்கள் ஆய்வுசெய்து நுட்பமாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து என் உரையை இந்த அளவுடன் நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில்

“கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம்”

மாவட்டங்களுக்குச் சென்று நிருவாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன்முறையாக வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசுத் திட்டங்கள் குறித்து 01.02.2023, 02.02.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 15.02.2023, 16.02.2023 ஆகிய தேதிகளில் சேலம் மாவட்டத்திலும், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக 05.03.2023, 06.03.2023 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்திலும், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 26.04.2023, 27.04.2023 ஆகிய தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திலும், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 25.08.2023, 26.08.2023 ஆகிய தேதிகளில் நாகப்பட்டினத்திலும் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, 17.10.2023 அன்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்குச் செல்லும் வழியில், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆய்வு.

அப்போது, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, அலுவலகத்தின் வருகைப்பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஊராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 66 மையங்களில் சுமார் 5,000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்குத் தரமான உணவினை உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். மேலும், இந்த ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் முடித்திட வேண்டும் என்றும், குடிநீர் விநியோகப் பணிகள், பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டடங்களைச் சீரமைத்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்த மாணவியிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “புதுமைப் பெண்” திட்டத்தின்கீழும் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 18.10.2023 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை

ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக்கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதில், கிராமக் கணக்குகளில் உரிய மாறுதல் மேற்கொள்ளப்படாமல் இருந்த பட்டாக்கள் சரி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 16,496 பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, அதற்கான பட்டாக்களை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்குக் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார்.

நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உபயோகத்தில் இருந்து அதில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக்கட்டி குடியிருப்போருக்கு அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவை இல்லை எனில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், சம்பந்தப்பட்ட துறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களைத் தணிக்கை செய்து உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங்களைப் பெற்றுத் தகுதியின் அடிப்படையில் குடியிருப்புகளை வரன்முறைப்படுத்த தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

மேலும், சென்னை புறநகர்ப் பகுதி, நகராட்சி, மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணையும், ஒருமுறை மட்டுமே வரன்முறை செய்து வீட்டுமனை ஒப்படை வழங்கும் திட்டத்திற்கு முன்னர் தளர்வு செய்யப்பட்டது.

மேற்படி அரசாணைகளின் அடிப்படையில், மாநிலம் முழுவதும் ஆட்சேபனை உள்ள, ஆட்சேபனையற்ற அரசு நிலங்களில் வீடுகள் கட்டிப் பத்தாண்டுகளுக்கு மேலாக குடியிருப்பவருக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

அவ்வகையில், 2000 - 2011 காலக்கட்டங்களில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நத்தம் அடங்கலில் ஏற்றப்படாததால், தங்களால் அதிகாரப்பூர்வமான பரிவர்த்தனை/ வங்கிக் கடன் பெற இயலவில்லை என்று திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட பொதுமக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் தொடர்ந்து கோரிக்கைகள் வரப்பெற்றன.

இக்கோரிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட வீட்டுமனைப் பட்டாக்களின் கிராமக் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, பட்டா வழங்கப்பட்ட விவரங்களைக் கிராம நத்தம் அடங்கல், வட்ட அலுவலகங்களில் பராமரிக்கப்படும் கணினி மயமாக்கப்பட்ட நத்தம் தரவுகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவுறுத்தினார்.

அதன்படி, முதற்கட்டமாகச் செங்கல்பட்டு மாவட்டத்தில் 8,136 பட்டாக்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3,949 பட்டாக்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4,411 பட்டாக்களும், என மொத்தம் 16,496 பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கள ஆய்வில் முதலமைச்சர் திட்ட ஆய்வுக் கூட்டத்தில் 15 பயனாளிகளுக்குக் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 3,256 பட்டாக்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 பட்டாக்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 197 பட்டாக்களும், என மொத்தம் 3,462 பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளும் விரைவில் நிறைவு பெறும்.

சென்னை, கொளத்தூரில் ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் 33 புதிய திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அடிக்கல் நாட்டினார் - 20.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.10.2023 அன்று, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.84 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கால்பந்து விளையாட்டுத் திடல், சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்து, ரூ.5.94 கோடி மதிப்பீட்டிலான 33 மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டுக் கட்டணமில்லா உயர் சிகிச்சையுடன் கூடிய கண் மருத்துவமனையும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமி தையல் பயிற்சி மையத்தையும் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர், பல்லவன் சாலையில் பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் சிங்காரச் சென்னை 2.0 நிதியிலிருந்து ரூ.3.30 கோடி செலவில், பார்வையாளர் மாடம், நடைபாதை, இறகுப்பந்துக் கூடம், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், மழைநீர் வடிகால் வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செயற்கைப் புல் தரையுடன் கூடிய கால்பந்து விளையாட்டுத் திடலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு.வி.க நகர் 8ஆவது தெருவில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.54.18 இலட்சம் செலவில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், நடைபாதை, இருக்கை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சி சிறுவர் பூங்காவைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, ஜவஹர் நகர் 1ஆவது சர்குலர் சாலையில் புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டுக் கட்டணமில்லா உயர் சிகிச்சை வசதிகளுடன் கூடிய கண் சிகிச்சை மையத்தையும், அக்கட்டடத்தின் முதல் தளத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தையல் பயிற்சி மையத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், கொளத்தூர், ஜவஹர் நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், பள்ளி, மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாவு அரவை இயந்திரம், காது கேட்கும் கருவி, தையல் இயந்திரம் என 55 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், வி.வி. நகர் 1ஆவது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜி.கே.எம் காலனி 27ஆவது தெருவில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி மையத்தை ரூ.5.05 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; ஜவஹர் நகர் 1ஆவது வட்ட சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் ரூ.9.95 இலட்சம் மதிப்பீட்டில் யோகா பயிற்சி மேடை அமைத்தல், கான்கிரிட் நாற்காலி உள்ளிட்ட இதர விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் பணி; ஜவஹர் நகர் 2ஆவது குறுக்குத் தெருவில் உள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சிக் கட்டடத்தை ரூ.10.09 இலட்சம் மதிப்பீட்டில் பழுது மற்றும் மேம்படுத்தும் பணி; ரங்கசாயீ தெருவில் உள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நடுநிலைப்பள்ளியில் ரூ.5.16 இலட்சம் மதிப்பீட்டில் சமையல் கூடத்தை மேம்படுத்தும் பணி; ரங்கசாயீ தெருவில் உள்ள விளையாட்டு மைதானத்தை ரூ.7.53 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; ஜெகநாதன் தெருவில் உள்ள வார்டு-69 அலுவலகத்தை ரூ.7.09 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; மதுரைத் தெருவில் உள்ள உடற்பயிற்சி கட்டடத்தை ரூ.8.88 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; சந்தியப்பதாஸ் தெருவில் உள்ள உடற்பயிற்சிக் கட்டடத்தை ரூ.8.97 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; வசந்தா கார்டன் மதுரை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.9.65 இலட்சம் மதிப்பீட்டில் மதிய உணவு திட்ட மையத்தை மேம்படுத்தும் பணி மற்றும் வசந்தா கார்டன் மதுரை தெருவில் ரூ.22.77 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணி; சின்ன குழந்தை பிரதானச் சாலையில் உள்ள உடற்பயிற்சிக் கட்டடத்தை ரூ.8.31 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

மதுரை சாமி மடம் தெருவில் உள்ள உடற்பயிற்சி கட்டடத்தை ரூ.26.44 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; கனகர் தெருவில் உள்ள கனகர் குளத்தை சுற்றி ரூ.29.69 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் சுற்றுசுவர் அமைக்கும் பணி; பெரியார் நகர் 20ஆவது தெருவில் அமைந்துள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் ரூ.29.42 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுசுவர் அமைத்தல், இதர மேம்படுத்தும் பணி; பல்லவன் சாலையில் அமைந்துள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சிச் சாலையோரப் பூங்காவில் ரூ.26.16 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், இதர பழுது பார்த்தல், மேம்படுத்தும் பணி; கோட்டம்-67இல் உள்ள பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய பல்நோக்குக் கட்டடத்தை ரூ.30.26 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி; திரு.வி.க. நகர் பிரதானச் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சித் தொடக்கப் பள்ளியை ரூ.32.36 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

திரு.வி.க நகர் பிரதானச் சாலையில் அமைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கட்டடத்தை ரூ.17.91 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; ரூ.12.38 இலட்சம் மதிப்பீட்டில் உசேன் காலனியில் உள்ள அம்மா உணவகத்தின் பழுதடைந்த

சுற்றுச் சுவரைப் புதியதாகக் கட்டும் பணி, குடிநீர்க் குழாய் அமைத்தல், மின்சார வசதிகள் அமைக்கும் பணி; நேர்மை நகர் பிரதானச் சாலையில் உள்ள நேர்மை நகர் மயான பூமியை ரூ.17.93 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி, ரூ.27.26 இலட்சம் மதிப்பீட்டில் 16ஆம் நாள் காரிய மண்டபம் அமைக்கும் பணி; மதுரை சாமி மடம் தெருவில் உள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சி உருது தொடக்கப் பள்ளியை ரூ.21.21 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; பல்லவன் சாலையில் அமைந்துள்ள வள மீட்பு மையத்தை ரூ.13.30 இலட்சம் மதிப்பீட்டிலும், பெருநகரச் சென்னை மாநகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தை ரூ.13.21 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தும் பணி;

ஜி.கே.எம். பிரதானச் சாலை (ஜம்புலிங்கம் பிரதானச் சாலை)யில் உள்ள மயான பூமியை ரூ.18.40 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி; வி.வி. நகர் 2ஆவது தெருவில் உள்ள விளையாட்டு மைதானத்தை ரூ.16.99 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; கே.சி. கார்டன் 2ஆவது தெருவில் அமைந்துள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள சமையல் கூடத்தை ரூ.6.07 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி; பார்த்தசாரதி தெருவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் ரூ.21.72 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கேரம் மற்றும் சதுரங்க விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி; அஞ்சுகம் நகர் 18ஆவது தெருவில் உள்ள அம்மா உணவகத்தை ரூ.5.14 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; முகமது உசேன் காலனி 5ஆவது தெருவில் உள்ள புதிய பல்நோக்குக் கட்டடத்தை ரூ.25.26 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி; LC1 பூங்காவில் ரூ.37.13 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக மழைநீர் சேகரிக்கும் குளம் அமைத்தல், செயற்கை நீரூற்று, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கும் பணி; அஞ்சுகம் நகர் 18ஆவது தெருவில் ரூ.28.70 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக துப்புரவு ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர் கட்டடம் கட்டும் பணி; வெற்றி நகரில் உள்ள தியாகராஜன் தெருவில் ரூ.34.49 இலட்சம் மதிப்பீட்டில் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;

என மொத்தம், ரூ.5.94 கோடி மதிப்பீட்டிலான 33 புதிய மேம்பாட்டுப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

16 இலட்சம் அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையில் 'அகவிலைப்படி' உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு–25.10.2023

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரும்பணியில், அரசோடு இணைந்து பணியாற்றும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. முந்தைய அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி, கடன் சுமைக்கு இடையேயும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

அவ்வகையில், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கனிவுடன் பரிசீலித்து, ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர், ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வைச் செயல்படுத்தப்படும் என்று ஏற்கெனவே வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால், ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ.2,546.16 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

கொரோனா பெருந்தொற்றிற்குப் பிறகு தமிழக அரசாங்கம் அகவிலைப்படி அதாவது டி.ஏ. அறிவித்தலை ஒரு காலந்தாழ்த்திய சூழ்நிலை ஏற்பட்டது. நேற்றைய தினம் மத்திய அரசாங்கம் டி.ஏ. அறிவித்த அடுத்தநாளே தமிழக அரசாங்கம் டி.ஏ. அறிவிச்சிருக்காங்க. இதனால தமிழக அரசு ஊழியர்களிடையே பெரும் மகிழ்ச்சியும் பெரும் வரவேற்பும் கிடைச்சிருக்கு. டி.ஏ. அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. முரளி அவர்கள்
நிலவரித்துறை அலுவலர், சென்னை மாவட்டம்.

நேற்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்கள் தமிழக அரசு ஊழியர்களுக்கு 4 சதவிகித அகவிலைப்படி உயர்த்தி வழங்கியுள்ளார். இது என்னைப்போன்ற அரசு ஊழியர்களுக்குப் பணியை உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் செய்வதற்கு மிகுந்த ஊக்கத்தை அளித்துள்ளது. 4 சதவிகித டி.ஏ. உயர்த்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ரம்யா அவர்கள்
ஆசிரியர், சேலம் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு 4 சதவிகித அகவிலைப்படியினை 16 இலட்சம் அரசு ஊழியர்களுக்கு வழங்கியதற்கு மிகுந்த மகிழ்ச்சியான செய்தி. தீபாவளி பண்டிகை சமயத்தில் இந்த அறிவிப்பு அனைத்து அரசு அலுவலர்களுக்கும் உத்வேகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதனை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திரு. சந்தான கிருஷ்ணன் அவர்கள்

மாவட்டக் கருவூல அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம்.

தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள அகவிலைப்படி 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது பண்டிகை தினத்தையொட்டி உயர்த்தியிருப்பது ரொம்ப சந்தோஷமாகவும், மனநிறைவாகவும் இருக்கு. இதை அறிவித்த நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

- திருமதி விஜயலஷ்மி அவர்கள்

ஊரக வளர்ச்சித்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

மத்திய அரசு அகவிலைப்படி நான்கு சதவிகிதம் அறிவித்தவுடனே மாநில அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் 4 சதவிகித அகவிலைப்படி உயர்வை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் வருவாய்த்துறை சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திருமதி நர்கீஸ் பானு அவர்கள்

முதுநிலை வருவாய் ஆய்வாளர், தேனி மாவட்டம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4 சதவிகித அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியுள்ளார். இதன்மூலம், 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக கிடைக்க இருக்கிறது. இந்த அகவிலைப்படி உயர்வை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திருமதி சுமதி அவர்கள்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை அறிவித்தவுடனேயே 01.07.2023 முதல் அகவிலைப்படியை வழங்கியது மட்டுமல்லாமல் அந்த 3 மாதத்திற்கான தொகையையும் ரொக்கமாக கொடுப்போம் என்று வாக்குறுதியளித்து அதைச் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப்போன்ற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தமிழக அரசிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. சேகர் அவர்கள்

தலைமை ஆசிரியர், தூத்துக்குடி மாவட்டம்.

தற்பொழுது 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக 4 சதவிகித அகவிலைப்படி உயர்த்தி வழங்கியுள்ள தமிழக அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஏனெனில் மத்திய அரசு அறிவித்த ஒரு வாரத்திற்குள்ளேயே இந்த அறிவிப்பானது வெளியாகியுள்ளதால் இது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதுவுமில்லாமல் அலுவலகத்திலுள்ள அனைத்துப் பணியாளர்களுமே தீபாவளி வருகின்ற காரணத்தினால் மிகுந்த நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. கார்த்திகேயன் அவர்கள்

உதவி நிருவாக அலுவலர், ஆதிதிராவிடர் நலத்துறை, வேலூர் மாவட்டம்.

அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கும் கருணைத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிவிப்பு – 26.10.2023

இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமிக்க மாநிலமாகத் தமிழ்நாட்டை நிலை நிறுத்துவதில் தொழிலாளர்களின் உழைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. இவர்களின் உழைப்பால்தான் நாடே வியக்கும் வண்ணம் பொருளாதார வளர்ச்சியை அடைந்தது மட்டுமன்றிக் குறிப்பிடத்தக்க அந்நிய முதலீடுகளையும் தமிழ்நாடு ஈர்த்து வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசின் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் வகையில், 2022–2023ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம், கருணைத் தொகை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட மிகை ஊதியச் சட்டம் 2015இன் படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21,000 என உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி மிகை ஊதியம் கணக்கிட இருந்த மாதாந்திர உச்சவரம்பும் ரூ.7,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி 2022–2023ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம், கருணைத் தொகையினைக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

- இலாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரித் தொகையைக் கணக்கில்கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம், 11.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம், கருணைத்தொகை வழங்கப்படும்.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம், 11.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம், கருணைத்தொகை வழங்கப்படும்.
- நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம், 1.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம், கருணைத்தொகை வழங்கப்படும்.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய 'C', 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம், 1.67 விழுக்காடு கருணைத்தொகை வழங்கப்படும்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய 'C', 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.
- இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.3,000 கருணைத்தொகையாக வழங்கப்படும்.

இதனால், மிகை ஊதியம் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8,400ம் அதிகபட்சம் ரூ.16,800ம் பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2,83,787 தொழிலாளர்களுக்கு ரூ.402.97 கோடி மிகை ஊதியம், கருணைத்தொகையாக வழங்கப்படும். இது தவிர பல்வேறு கூட்டுறவு அமைப்புகள், நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை, பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் எதிர் வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும்.

தேவர் திருமகனார் அவர்கள்
‘வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார்’

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர்மாலை வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தி செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை - 30.10.2023

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி ஆறாண்டு காலம் சிறையில் இருந்தவர் பசும்பொன் திருமகனார் அவர்கள். அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் இன்று அவருக்கு நாங்கள் எல்லாம் வணக்கத்தையும், அஞ்சலியையும் செலுத்தி இருக்கிறோம்.

“தேவர் திருமகன்” என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அவரை அன்போடு அழைக்கத் தொடங்கினார்கள்.

“எல்லாக் கட்சிகளும் ‘தலைவர் – தொண்டன்’ என்று வலம் வருகின்ற அந்தக் காலக்கட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ‘அண்ணன் – தம்பி’ என்கிற பாசத்தோடு எப்படிக் கட்சி நடத்துகிறீர்கள்?” என்று ஆச்சரியத்தோடு பசும்பொன் அவர்கள், நம்முடைய மதிப்பிற்குரிய எஸ்.எஸ்.தென்னரசு அவர்களிடத்திலே ஆச்சரியத்தோடு, மகிழ்ச்சியோடு, கேட்டிருக்கிறார்கள்.

1963ஆம் ஆண்டு தேவர் அவர்கள் மறைவெய்திய நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் நேரடியாக இங்கு வருகை தந்து அவருக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள்.

1969ஆம் ஆண்டு பசும்பொன்னுக்கு வந்து அவருடைய நினைவிடத்தைப் பார்வையிட்டு அதற்குத் தேவையான அரசு உதவிகளைச் செய்தவர் தான் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

2007ஆம் ஆண்டு பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை மாபெரும் அரசு விழாவாக நடத்திப் பெருமை சேர்த்தவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

அப்போது, தேவர் நினைவிடத்தில் அணையாவிளக்கை அமைத்துத் தந்ததும் – தேவர் இல்லத்தை ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பித்ததும் – ரூ.9 இலட்சம் மதிப்பில் நூற்றாண்டு விழா வளைவு அமைத்ததும், ரூ.9 இலட்சம் செலவில் புகைப்படக் கண்காட்சி அமைத்துக் கொடுத்ததும், ரூ.4 இலட்சத்தில் நூலகம், ரூ.5 இலட்சத்தில் முடி இறக்கும் இடம், ரூ.5 இலட்சத்தில் பால்குட மண்டபம், ரூ.5 இலட்சத்தில் முளைப்பாரி மண்டபம் இப்படி எல்லாவற்றையும் அமைத்துக் கொடுத்தவர் தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

தேவர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பசும்பொன் கிராமத்துக்கு மட்டும், மொத்தமாக ரூ.2.05 கோடி செலவில் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்தவர்தான் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்!

அதுமட்டுமல்லாமல், மதுரையில் இன்றைக்குக் கம்பீரமாகத்தேவர்சிலைஅமைந்திருக்கிறதுஎன்றால், மதிப்பிற்குரிய பி.கே.மூக்கையாத்தேவர் முயற்சியால் அமைக்கப்பட்ட அந்தச் சிலைத் திறப்பு விழாவை, தலைவர் கலைஞர் அவர்கள் அரசு விழாவாக நடத்தி, அன்றைக்குக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களை அழைத்து வந்து, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலேயே அந்த நிகழ்ச்சியை நடத்தினார்.

அதேபோல், மதுரை ஆண்டாள்புரம் பாலத்துக்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்று பெயர் சூட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் ரூ.25 இலட்சம் மதிப்பில் அறக்கட்டளை உருவாக்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்!

கழக ஆட்சி முதன்முதலாக உருவாகிய நேரத்தில், பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், தங்களுடைய மக்களது கல்வி மேம்பாட்டிற்காகக் கல்லூரிகளைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டார்கள். அவை எல்லாவற்றிற்கும் அனுமதி வழங்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

கமுதி, உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர் ஆகிய இடங்களில் கல்லூரிகள் அமையக் காரணமாக இருந்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்!

இதில் மேலநீலிதநல்லூர் கல்லூரியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து அதைக் கைப்பற்றி நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்ததும் 2021ஆம் ஆண்டு அதை மீட்டுக் கொடுத்திருக்கிறோம் என்பதும் வரலாறு.

அதேபோல, இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட, தமிழக அரசின் சார்பில் நான் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

தேவர் திருமகனார் நினைவிடத்தில், பொதுமக்கள் சிரமமின்றி அஞ்சலி செலுத்த அவர்களுக்கு வசதியாக ரூ.1.50 கோடிச் செலவில் இரண்டு நிரந்தர மண்டபங்கள் அமைக்கப்படும் என்று நான் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறேன் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக, 1989ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலைவாய்ப்பில் இந்தச் சமூக மக்கள் முன்னேற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவரும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

ஆகவே, தேவர் திருமகனார் அவர்கள் 'வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், அவருடைய மறைவுக்குப் பிறகும் வீரராகவே இன்றைக்கும் போற்றப்படுகிறார்'- என்று பசும்பொன் தேவர் பற்றித் தலைவர் கலைஞர் இப்படியெல்லாம் பேசியிருக்கிறார். எனவே, அவருடைய சார்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அரசின் சார்பில், வாழ்க பசும்பொன் தேவர் பெருமகனார் புகழ்! என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

ரூ.190.40 கோடி மதிப்பீட்டில்

கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம்

மதுரை மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார் - 30.10.2023

ரூ.150.28 கோடி மதிப்பீட்டில்

தொண்டி சாலையில் மேம்பாலம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.10.2023 அன்று, மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி, மதுரை தொண்டி சாலையில் அப்பல்லோ சந்திப்பில் ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாலம், வட்ட வடிவச் சந்திப்பு அமைக்கும் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கோரிப்பாளையம் மேம்பாலம் கட்டும் பணியினை தொடங்கி வைத்தல்

மதுரை வைகை ஆற்றின் தென்புறம் மீனாட்சி அம்மன் கோவில் இரயில்வே நிலையம், பெரியார் பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் அமைந்துள்ளன. வைகை ஆற்றின் வடபுறம் இராஜாஜி மருத்துவமனை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாட்டுத்தாவணி - எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், மதுரை மாநகராட்சி அலுவலகம், காவல் ஆணையர் அலுவலகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியன அமைந்துள்ளன. நகரின் தென் பகுதியிலிருந்து வடபகுதியில் அமைந்துள்ள அலுவலகங்கள், மருத்துவமனைகளுக்கு இச்சந்திப்பின் வழியாகப் போக்குவரத்து நடைபெறுவதால் இங்குக் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட கோரிப்பாளையம் சந்திப்பு உட்பட பல்வேறு இடங்களில் மேம்பாலம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் 21.01.2022 அன்று நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்திருந்தார்.

அதன்படி, மதுரை இராஜாஜி மருத்துவமனை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 01.05.2022 அன்று, சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலைத் துறையின் 75ஆவது ஆண்டு விழாவில் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, கோரிப்பாளையம் சந்திப்பில் ரூ.190.40 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ள மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோரிப்பாளையம் சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 61 தூண்கள், 62 கண்களுடன் மொத்தம் 2 கி.மீ. நீளத்திற்கு மேம்பாலம் அமையவுள்ளது. இப்பாலத்தின் ஏறுதளம் தமுக்கம் பகுதியில் தொடங்கிக் கோரிப்பாளையம் சந்திப்பு, வைகை ஆற்றில் ஆல்பர்ட் விக்டர் பாலத்திற்கு அருகில் இணையாகப் புதிதாகக் கட்டப்படும் பாலம் வழியாக 1.300 கி.மீ. நீளத்திற்கு 12 மீட்டர் அகலத்துடன் ஒருதிசை வழித்தட மேம்பாலமாகச் சென்று நெல்பேட்டை அண்ணா சிலை சந்திப்பில் இறங்கும் வகையில் கட்டப்படவுள்ளது. மேலும், கோரிப்பாளையம் சந்திப்பில் பாலத்திலிருந்து செல்லூர் நோக்கிச் செல்ல கூடுதலாக 700 மீட்டர் நீளத்திற்கு இறங்குதளம் 8.50 மீட்டர் அகலத்துடன் அமையவுள்ளது.

மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் பக்கவாட்டின் இருபுறமும் அணுகுசாலை அமைக்கப்படுவதுடன், பாதசாரிகள் நடந்து செல்ல நடைமேடையுடன் கூடிய மழைநீர் வடிகால், பேருந்து நிறுத்த வசதிகள் ஆகியன அமைக்கப்படவுள்ளன. மேலும், பீபீ குளம் - காந்தி அருங்காட்சியகம் சாலை சந்திப்பில் அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் செல்வதற்காக ஒரு வாகனச் சுரங்கப்பாதை (Vehicle Under Pass) அமைக்கபடவுள்ளது.

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வரும்பொழுது கோரிப்பாளையம் சந்திப்பில் பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின்றிப் பயணிக்க இயலும்.

மதுரை தொண்டி சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி, வட்ட வடிவச் சந்திப்பு அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தல்:

மதுரை – தொண்டி சாலை (SH 33) மதுரை மாவட்டத்தில் உள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையானது மதுரை மாநகரிலிருந்து சிவகங்கை செல்வதற்கும் மதுரை வட்டச்சாலையை அணுகுவதற்கும் பயன்படுவதால் அப்பல்லோ சந்திப்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பல்வேறு இடங்களில் சாலை மேம்பாலம், உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.01.2022 அன்று மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி மதுரை – தொண்டி சாலையில் உள்ள அப்பல்லோ சந்திப்பில் சாலை மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும், மிகவும் நெரிசல் மிகுந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆவின், அப்பல்லோ சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னலை அப்புறப்படுத்தி அப்பகுதியினை அகலப்படுத்தி வட்ட வடிவச் சந்திப்பு (Roundabout) அமைப்பதற்கும் ரூ.150.28 கோடி மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த மேம்பாலம் 30 தூண்களுடன் மொத்தம் 1,100 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படவுள்ளது. அதில் நான்கு வழித்தடப் பாலத்தின் அகலம் 17.2 மீட்டர் ஆகும். மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் பக்கவாட்டின் இருபுறமும் இருவழித்தடச் சேவைச் சாலையாக விரிவாக்கம், மழைநீர் வடிகால் வசதிகள் ஆகியன அமைக்கப்படவுள்ளன.

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வரும்பொழுது பொதுமக்கள் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசலின்றிப் பயணிக்க இயலும்.

சென்னையில்

50,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் "சர்வதேசத் தொழில்நுட்பப் பூங்கா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து ஆற்றிய உரை - 31.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 31.10.2023 அன்று, சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமத்தின் துணை நிறுவனமான ரேடியல் ஐடி பார்க் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Radial IT Park Private Limited), 50,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 5 மில்லியன் சதுர அடிப் பரப்பளவில் அமைத்துவரும் தொழில்நுட்பப் பூங்காவில், முதற்கட்டமாக 1.3 மில்லியன் சதுர அடிப் பரப்பளவில் அமைத்துள்ள சர்வதேசத் தொழில்நுட்பப் பூங்காவை (International Tech Park) திறந்து வைத்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கையின் அடிப்படையில், கிராமப்புறங்களைச் சார்ந்த, படித்த இளைஞர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களுக்கு அருகிலேயே அதிக எண்ணிக்கையிலான உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் ஆகிய இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்புள்ளதாக, மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், உதகமண்டலத்தில் புதுமையான அம்சங்களுடன் ஒரு மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமம்

ஆசியாவின் மிகப்பெரிய வணிகக் குழுமங்களில் ஒன்றான கேப்பிட்டாலாண்ட் குழுமம், பல நாடுகளில், முப்பதுக்கும் மேற்பட்ட சில்லறை வணிகம், அலுவலக வளாகங்கள், தங்குமிடங்கள், வணிகப் பூங்காக்கள், போக்குவரத்து மேலாண்மை, தரவு மையங்களை நிறுவியுள்ளது.

முன்னதாக அசென்டாஸ் (Ascendas) என அறியப்பட்ட கேப்பிட்டாலாண்ட், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் முதல் தனியார் தகவல் தொழில்நுட்ப வணிகப் பூங்காவைச் சென்னையில் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. இக்குழுமம் சென்னைத் தரமணியில் சர்வதேச தொழில்நுட்ப பூங்கா, செங்கல்பட்டு, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் சைபர்வேல் (CyberVale), சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து

வைக்கப்பட்ட சர்வதேசத் தொழில்நுட்பப் பூங்கா என மூன்று வணிகப் பூங்காக்களைக் கொண்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கேப்பிட்டாலேண்ட் முதலீட்டு நிறுவனத்தின், சர்வதேசத் தொழில்நுட்பப் பூங்கா, சென்னை–ரேடியல் சாலைத் திட்டத்தின் முதல் கட்டத்தைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகத்தரம் வாய்ந்த ஒரு தொழில்நுட்பப் பூங்காவைத் தமிழ்நாட்டில் தொடங்குவதற்காக இந்த நிறுவனத்திற்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் புதியதொரு தொழில் புரட்சி நடந்து கொண்டு வருகிறது. அதற்குச் சான்றாக, ஏராளமான தொழில் நிறுவனங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துகொண்டு இருக்கின்றன. அந்த வரிசையில் கேப்பிட்டாலேண்ட் நிறுவனமும் இணைந்திருப்பது எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. 5 மில்லியன் சதுர அடிப் பரப்பளவில் கட்டப்பட்டிருக்கின்ற இந்தச் சர்வதேசத் தொழில்நுட்பப் பூங்காவில், 50 ஆயிரம் தகவல் தொழில்நுட்பப் வல்லுநர்கள் பணிபுரிகிற அளவுக்கான உலகத்தரம் வாய்ந்த அலுவலக இடங்கள் கட்டித்தர நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இது இன்றைக்கு மிக மிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது.

முதல் கட்டமாக,

இன்றைக்கு 1.3 மில்லியன் சதுர அடிக்கான பூங்கா தயார் நிலையில், துவக்கி வைக்கப்பட இருக்கிறது.

இரண்டாவது கட்டத்தின் கட்டுமானப் பணிகளையும் துவக்கி இருப்பதாக இந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறது. கேப்பிட்டாலேண்ட் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கும், தமிழ்நாடு அரசு எல்லா உதவிகளையும் செய்யும் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்.

நான் கடந்த மே மாதம் சிங்கப்பூருக்கு அரசு முறைப்பயணமாகச் சென்றிருந்தேன். அங்கே கிடைத்த வரவேற்பும், உற்சாகமும் எங்களால் மறக்க முடியாதது. இந்தப் பயணத்தின்போது, கேப்பிட்டாலேண்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. சஞ்சீவ் தாஸ் குப்தா அவர்களைச் சந்தித்து, அவர்கள் நிறுவனம் பல முதலீட்டுத் திட்டங்களைத் தமிழ்நாட்டில் மேற்கொள்ளுவதை பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினேன். அதன் தொடர்ச்சியாக, இந்த விழா நடைபெறுவது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது.

தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்வார்கள். அது போலவே நடந்திருக்கிறது. எங்கள் ஆட்சியின் மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில்துறையில் முதன்மை மாநிலமாக முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அது மட்டுமல்ல, இந்த வளர்ச்சி சீராகவும், பரவலாகவும் இருக்க வேண்டுமென்று மாநிலத்தில் இருக்கின்ற இரண்டாம், மூன்றாம் அடுக்கு நகரங்களிலும் 9 நியோ டைடல் பார்க்குகள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கின்ற வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்துக்கொண்டு வருகிறோம். வளர்ந்து வருகின்ற துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கின்ற வகையில், துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறோம். அந்த வகையில், ஆராய்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்கள், புத்தாக்கத் திட்டங்கள் திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களைத் தமிழ்நாட்டில் பெருமளவில் ஈர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டினோம்.

உலக அளவில், அதிவேகமாக ஏற்பட்டு வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நம்முடைய தொழில்துறையும் பயணம் செய்வது இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்கின்ற நோக்கத்தில்தான் "தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை 2022" கடந்த ஆண்டு ஜூலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது. இதற்குப் பிறகு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புத்தாக்கம், புத்தொழில்கள், உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தொழில்துறைக் கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்வோர், புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆராய்ச்சி, மேம்பாடு

தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள், குளோபல் கேப்பபிலிட்டி சென்டர்ஸின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. முப்பதுக்கும் மேற்பட்ட GCC-க்கள் தங்களுடைய புதிய நிறுவனங்கள் அல்லது விரிவாக்கத் திட்டங்களை நிறுவியிருக்கிறார்கள். யு.பி.எஸ், வால்மார்ட், ஹிட்டாச்சி எனர்ஜி போன்ற சர்வதேச நிறுவனங்கள் தங்களுடைய GCC மற்றும் ஆராய்ச்சி, மேம்பாட்டு மையங்களை அண்மையில் நிறுவியிருக்கிறது. உற்பத்தி, சேவைத் துறைகளில், தமிழ்நாடு உலக அளவில் சிறந்து விளங்கி வருகிறது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தும். இந்த வேகத்தைப் பார்க்கின்றபோது "2030ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற எங்கள் இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தசோ சிஸ்டம்,
ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சீமென்ஸ்

அமெரிக்க நிறுவனமான ஜி.இ. ஏவியேஷன் உடன் இணைந்து, மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையங்கள் (Centres of excellence), தொழில் புத்தாக்க மையங்களைத் (Start-Ups) தமிழ்நாடு அரசு அமைத்திருக்கிறது.

திருப்பெரும்புதூர், ஓசூரில் இருக்கின்ற சிப்காட் தொழில் பூங்காக்களில், உலகத் தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்ல, ஒரு துடிப்பான தகவல் தொழில்நுட்பசூழலமைப்புடன்,வளர்ச்சிக்குத்திறன் இடைவெளி ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது என்றுதான், என்னுடைய கனவுத்திட்டமான, நான் முதல்வன் திட்டத்தை முழு முனைப்புடன் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். உயர்கல்வி கற்பிக்கின்ற மாணவர்கள், இளைஞர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சிகளை வழங்கி, அவர்கள் துறையில் முதன்மையானவர்களாகத் திகழச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்.

இவை எல்லாம் முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை விதைத்திருக்கிறது. இந்தச் சீரிய முயற்சிகள் காரணமாகத்தான், தமிழ்நாட்டில், முதலீடுகளின் வரத்து வளர்ச்சியடைந்து வருவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

படமும்/செய்தியும்

அரசு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போர்களுக்குத் திருத்தப்பட்ட பட்டாக்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 25.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில், திருமதி சரஸ்வதி செல்வராஜ், திருமதி மரகதம் மாரிமுத்து, திருமதி மொபினா, திருமதி செல்லம்மாள் ஆகியோர் சந்தித்து, பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில், கிராமக் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு திருத்தப்பட்ட பட்டாக்களை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில்
ரூ.157.33 கோடி மதிப்பீட்டில்
9 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழங்கி ஆற்றிய உரை – 27.10.2023

திருநெல்வேலிமாநகராட்சிஅலுவலகம்எதிரில் உள்ள வர்த்தக மையத்தில், 27.10.2023 அன்று, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, திருநெல்வேலி மாநகராட்சி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் தூய்மைப்பணி டிராக்டர், மூன்று சக்கர ஸ்கூட்டர்கள், மின்சார தையல் இயந்திரம், வீட்டுமனைப்பட்டாக்கள், விவசாயக் கடன் அட்டை, கல்விக் கடன்கள், தொழில் கடன்கள் உள்ளிட்ட 9 ஆயிரம் பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, ஊரக வளர்ச்சித்துறை சார்பில் கட்டடங்கள், பாலங்கள், திருநெல்வேலி மாநகராட்சிச் சார்பில் அரசு மருத்துவமனையில் உறவினர்கள் தங்கும் அறைகள் எனப் புதிய திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கிற வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் 1,200 டெபிட் கார்டுகள், 9 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.157.33 கோடி அளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள். ஒரு கோடியே 6 இலட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், கிட்டத்தட்ட 2 இலட்சத்து 48 ஆயிரம் பேர் பயன்பெற்றுள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டது, இதுவே முதல்முறை. இந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி தான் உங்களுக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14ஆம்

தேதியே கழக அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு 1,200 டெபிட் கார்டுகளை வழங்குகிறோம் என்றால், இவை பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இந்தத் திட்டத்தைப் பின்பற்றி, கருநாடகா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எந்த ஒரு அரசு திட்டத்தைச் செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கப்படாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். இதுவரை 11 இலட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். மேலும், உங்கள் மேல்முறையீட்டைப் பரிசீலிக்க துணை ஆட்சியர், சார் ஆட்சியர், வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியுள்ளோம். மகளிர் மட்டுமன்றித் திருநங்கையர், மாற்றுத்திறனாளிகளும் இன்றைக்கு இந்த திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர். மேல்முறையீடு செய்வதற்கான காலம் நேற்று முன் தினத்தோடு முடிவடைந்த நிலையில், அந்த மேல்முறையீட்டு மனுக்களின் மீதான பரிசீலனையை நேற்று சாத்தூர் கோட்டத்தில் ஆய்வு செய்தோம். நான் சட்டமன்றத்தில் பேசியதுபோல், தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்தத் திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

அது மட்டுமின்றி, அரசின் நலத்திட்டங்கள் உடனுக்குடன் மக்களைச் சென்றடைய வேண்டும். குறிப்பாக, ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும். இதுதான் நம் திராவிட மாடல் அரசின் இலட்சியம். அதன் வெளிப்பாடு தான், இன்றைக்கு, மகளிர், மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் என அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா, அரசு மருத்துவமனைக்கான உறவினர்கள் தங்கும் அறைகள், வங்கிக்கடன், சுழல் நிதி, விவசாயக்கடன் அட்டை, வணிகக்கடன், தொழில் மானியக்கடன், கல்விக்கடன் என 9 ஆயிரம் பேருக்கு ரூ.157.33 கோடி அளவில் நலத்திட்டங்களை வழங்குகிறோம்.

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள், கல்வி, இலக்கியம், விளையாட்டு ஆகிய அனைத்துத் துறைகளிலும் முன்னேறிட வழிகாட்டும் வகையில், அன்பாடும் முன்றில் எனும் குறும்படத்தையும் வெளியிட்டுள்ளோம். இதனை பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் வாழ்வில் சிறக்க என் வாழ்த்துக்கள்.

பெண்ணுரிமை குறித்துத் தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதைச் செய்தார்கள், கலைஞர் அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கானத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று பெரியார் சொன்னார். ஒன்று, கலாச்சார ரீதியாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, சட்ட ரீதியாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று,பொருளாதாரரீதியாகத்தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும், பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள்.

பெண்கள் முன்னேற்றத்துக்குக் கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார், பணக்காரன், ஏழை அடிமைத்தனத்தைவிட, மேல்ஜாதி, கீழ்ஜாதி அடிமைத்தனத்தைவிட, முதலாளி, தொழிலாளி அடிமைத்தனத்தைவிட மோசமானது இந்த ஆண், பெண் அடிமைத்தனம் என்று சொன்னார்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது. பெண்களுக்குப் படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது மட்டும்தான் பெண்களுக்கு வேலை. இப்படித்தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இது எல்லாத்தையும் எதிர்த்துப் பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தது நம்முடைய திராவிட இயக்கம். கழக அரசின் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிட மாடல் திட்டங்கள். இரண்டாவதாக, சட்ட ரீதியாகப் பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும், ஆண் பிள்ளைக்கு மட்டும் தான் அப்பா சொத்திலே உரிமை இருக்கிறது. பெண் பிள்ளைக்குச் சொத்திலே உரிமை கிடையாது என்கிற நிலைதான் சட்ட ரீதியாக இருந்தது. ஆனால், நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், தந்தை சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு

எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமை கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் நமது தி.மு.க. அரசு கொண்டு வந்த சட்டம்தான்.

அடுத்ததாக, பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகள் என்ன? ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காகத் தனது அப்பாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காகக் கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வயது முதிர்ந்த காலத்தில் பணத்திற்காகத் தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும். இப்படிதான் இருக்கிறது பெண்களின் நிலை. இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப்போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும்.

எனவேதான், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்குப் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000 வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காகப் பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கியமானது. 17 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தைக் குறைக்கக்கூடிய திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்குச் செல்லக்கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு டிபன் சமைச்சு வச்சுட்டு போறது எவ்வளவு சிரமம். அந்தச் சிரமத்தை இந்தத் திட்டம் போக்கியிருக்கிறது. இதுவரை நமது கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக்கூடிய திட்டம்தான் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'. இந்தத் திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கும் பெயர்தான் இதிலே முக்கியமானது. இந்தத் திட்டம் மகளிருக்கான உரிமை என்பதால், இதற்குக் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என்று பெயர் வைத்துள்ளார்கள். பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக, சகோதரனாக இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்திப் பெற முடியும். பெண்கள் மொபைல் பயன்படுத்துகிறீர்கள். உங்களுக்கு நிறைய செய்திகள் வரும். அப்படி வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு ஷேர் செய்ய வேண்டும். இப்போது, உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். அதனால்தான் தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஒன்றியக்குழுத் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகிய பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர். இந்தச் சாதனையை நடத்திக் காட்டியது நம் திராவிட மாடல் அரசு. பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக இருப்பதுதான் பெண்ணுரிமைக்கான அடித்தளம்.

இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும், பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காகச் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள்தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியைத் தங்கள் குடும்பப் பராமரிப்புக்காகச் செலவிடுகிறார்கள்.

எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயனாளிகள், பிற துறைகளின் பயனாளிகளாக இங்கு வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, கிண்டி ஆராய்ச்சி நிலையத்தில் "நம்ம சாலை" புதிய மென்பொருள் மற்றும் கைப்பேசி செயலி அறிமுகம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 01.11.2023

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களின் தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 01.11.2023 அன்று, சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், பள்ளங்களற்ற சாலை என்ற இலக்கை அடைய சாலையில் ஏற்படும் பள்ளங்களைப் பொதுமக்களின் துணையோடு கண்டறிந்து, குறித்த காலத்தில் செப்பனிடும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற புதிய மென்பொருள் மற்றும் கைப்பேசி செயலியைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான சாலை உள்கட்டமைப்பு அவசியம். கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்திடவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும், சந்தைகள், மருத்துவமனைகள், பள்ளிகளை அணுகுவதை எளிதாக்குவதில் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தரமான, பாதுகாப்பான சாலைக் கட்டமைப்பினை, உருவாக்கி, பராமரித்து வருகிறது.

தமிழ்நாடு "விபத்தில்லா மாநிலம்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தினைச் செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை அடைவற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்படும் சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால்,

2023–2024ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, பிரத்தேயக கைப்பேசிச் செயலி உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற மென்பொருள், கைபேசிச் செயலி உருவாக்கப்பட்டு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்செயலியின் மூலம், நெடுஞ்சாலைத்துறையினால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் குறித்துப் பொதுமக்கள் கைப்பேசிச் செயலி வாயிலாக, புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய பொறியாளருக்குச் செயலி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களைப் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பிறகு, சரி செய்யப்பட்ட விவரம், சாலையின் புகைப்படங்களுடன், "நம்ம சாலை" செயலி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, புகார் அளிக்கும் பொதுமக்களின் அலைபேசிக்கு அனுப்பப்படும். அதன்படி, சாலையில் ஏற்படும் பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும்.

இச்செயலி மூலம் பள்ளங்கள் குறித்துத் தெரிவிப்பதுடன் மட்டுமல்லாமல், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்குப் போன்றவற்றைக் குறித்தும் புகார்கள் அளிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

2023–2024ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட, அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (CUG) முறையில் நிரந்தர அலைபேசி எண்., நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 45 கோட்டப் பொறியாளர்கள், 192 உதவிக் கோட்டப் பொறியாளர்கள், 274 உதவிப் பொறியாளர்களுக்கும் எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் "நிரந்தர தொலைபேசி" எண் வழங்கப்பட்டது.

மேலும், இவ்விழாவில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலைகளான, ரூ.204.70 கோடி மதிப்பீட்டில் மேலூர் – திருப்பத்தூர் சாலை, ரூ.198.65 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் – மன்னார்குடி சாலை, ரூ.219.47 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் – உளுந்தூர்பேட்டை சாலை ஆகிய சாலைகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

மேலூர் – திருப்பத்தூர் சாலையில், திருப்பத்தூர் நகர்ப்பு றவழிச்சாலையில் 63 குறு, 4 சிறு பாலங்களும், தஞ்சாவூர் – மன்னார்குடிச் சாலையில் 44 குறு, 4 சிறு பாலங்களும், விருத்தாசலம் – உளுந்தூர்பேட்டை சாலை, மங்களம்பேட்டை நகர் புறவழிச்சாலையில் 46 குறு, 8 சிறு பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி சாலைகளில், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்ய தெருவிளக்குகள், சூரிய மின்விளக்குகள், கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டதாலும் மங்கலம்பேட்டை புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளதாலும் கனரக வாகனங்களின் போக்குவரத்து நெரிசல், பயண நேரம் குறைந்து, விருத்தாசலத்தில் இருந்து சென்னை செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குக் கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும். விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள பீங்கான் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நகர்வு செய்ய போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளது. ●

நான்காம் பக்க அட்டைப் பட விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 12.10.2023 அன்று சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சீன நாட்டின் ஹாங்சோவில் நடைபெற்ற 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 20 வீரர் – வீராங்கனைளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ. 9.40 கோடிக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கலந்துகொண்டார்.

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று...

தொலைக்காட்சி இல்லாத வீடுகளில் வசிக்கும் ஏழை எளியவர்களும், நடுத்தர மக்களும், சாதாரண சாமான்ய மக்களும் உலகச் செய்திகளையெல்லாம் அறிந்துகொள்ளவும், கலைகளைக் கண்டுகளிக்கவும், இலக்கியத்தை அறிந்துகொள்ளவும், கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் எண்ணச் சோலையாக அமைகின்ற **"இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தினை"** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2006 அன்று தொடங்கி வைத்தார்.

"இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்"

இன்று...

பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம், பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2023 அன்று, 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் **"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினைத்"** தொடங்கி வைத்தார்.

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்"

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாள்

படமும் / செய்தியும்

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், 08.11.2023 அன்று, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் குழுக்கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில், 07.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், திரைப்படத் துறையினர் நல வாரியத்தின் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைச் செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., அலுவல்சாரா உறுப்பினர்கள் திரு. முரளி ராமசாமி, திரு. எம்.எஸ்.பாஸ்கர், திரு. பூச்சி எஸ். முருகன், திரு. போஸ்வெங்கட், திரு. மங்கை அரிராஜன், திரு. பிரேம்குமார், திரு. தாடி பாலாஜி, திரு. ஜெ. மதியழகன், திரு. வி.பாக்கியராஜ், திரு. பரிமளவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில், சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான விருதுகளை, காட்சி ஊடகங்களில் பணிபுரியும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு 31.10.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்ப் பற்றாளர்கள் விருதுகள்

படமும் / செய்தியும்

"தமிழ் அகராதியியலின் தந்தை" என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்த நாளை முன்னிட்டுத் "தமிழ் அகராதியியல் நாள் விழாவில்" மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், 2022ஆம் ஆண்டுக்கான "தூயதமிழ்ப் பற்றாளர் விருது", "தூயதமிழ் ஊடக விருது", "நற்றமிழ்ப் பாவலர் விருது" என மொத்தம் 38 தமிழ்ப் பற்றாளர்களுக்கு விருதுகளை சென்னை, கலைவாணர் அரங்கத்தில், 08.11.2023 அன்று வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., முனைவர் கோ.விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

படமும்/ செய்தியும்

"தமிழ்ப்பேசி எனும் குறுஞ்செயலி" வெளியீடு

சென்னை, கலைவாணர் அரங்கத்தில், 08.11.2023 அன்று "தமிழ் அகராதியியலின் தந்தை" என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்த நாளை முன்னிட்டுத் "தமிழ் அகராதியியல் நாள் விழாவில்" மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், "தமிழ்ப்பேசி எனும் குறுஞ்செயலியை" வெளியிட்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான உயர்மட்ட குழு ஆலோசனைக் கூட்டம்

படமும்/செய்தியும்

தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் இந்தியக் கப்பற்படையின் கிழக்குப் பிராந்திய FOC - IN - CHIEF/ Vice Admiral இராஜேஷ் பெந்தர்கார், AVSM, VSM, ஆகியோர் தலைமையில் தமிழ்நாடு கடலோரப் பாதுகாப்புத் தொடர்பாக உயர்மட்ட குழுவின் 8ஆவது ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 19.10.2023 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசுத் துறைச் செயலாளர்கள், கடலோரக் காவல்படை, இந்தியக் கப்பல்படை, காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

"மாமேதை"

இராஜாஜி அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையையும், மிகத்தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்.

திருக்குறளுக்கு அவர் உரை எழுதியிருக்கிறார். அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது. அந்தத் தனித்தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்ந்த மதிதான்.

"சிறு பொறிதான் பெரு நெருப்பாகும்" என்பதை உணர்ந்த இராஜாஜி, பிரச்சினைகளில் சிறியது-பெரியது என்ற பாகுபாடு பார்க்காமல், அவற்றைத் தீர்ப்பதற்குத் தம்முடைய கருத்தைச் செலுத்துவார்.

"அவருக்குப் பல எதிர்ப்புகள் ஏற்பட்ட போதிலும் கலங்குவதில்லை.

'நாம் சொன்னால் யாரும் எதிர்க்கமாட்டார்கள்' என்ற எண்ணத்தில் அவர் பிரச்சினைகளை அணுகுவது இல்லை.

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பது யாதெனில் மக்கள் எல்லாரையும் சிந்திக்கும்படி அவர் செய்திருக்கிறார் என்பதேயாகும்.

இதுவே, இராஜாஜி தமது வாழ்க்கையில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது ஆகும்."

உலக அமைதிக்காக அவர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டு, அமெரிக்க நாடு சென்று, அந்நாட்டின் அதிபர் கென்னடியைச் சந்தித்தார்.

உலகுக்கு அமைதி வேண்டும் என்பதற்காக அந்தப் பயணத்தை மேற்கொண்டவர். 'இந்தியாவிலிருந்து சென்றவர்' என்பது இந்த நாட்டினுக்குப் பெருமைமிகு அத்தியாயமாக விளங்கும்.

இராஜாஜி ஆற்றிய பணி அத்தகையது. அந்தக் காரியத்துக்கு ஈடான பெருமைமிக்கது அவரது வாழ்க்கை வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.

உலகை மருட்டிய அணுகுண்டுப் பிரச்சினை 5 குறித்து அமெரிக்க ஆட்சித் தலைவரோடு அவர் பேசிவிட்டு வந்தது - உலக வரலாற்றில் இடம் பெறும்.

இந்த உலகில் ஒரு நாள் போர் நிறுத்தம் ஏற்படும். பயங்கரங்கள் நீடிக்காமல் உலகம் 'சாந்தி பூமியாக' ஆகும்.

அதற்காகப் பெருமுயற்சி எடுத்தவர்களது பெயர்களில் இராஜாஜியின் பெயர் உறுதியாக இடம் பெறும்.

அப்படிப்பட்ட மாமேதை ஒருவர் வாழ்ந்த நாட்களில் நாம் வாழ்கிறோம் என்பதற்கு இதுவரை அவரால் நாம் அடைந்த பலன்களை எண்ணி, நம் நன்றியையும் அஞ்சலியையும் இந்த விழா நாளில் நாம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

- பேரறிஞர் அண்ணா அவர்கள் 14.12.1968 அன்று சென்னையில்,
மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 91ஆவது பிறந்த நாள் விழாவில்
ஆற்றிய உரையிலிருந்து...

பாரதி ஒரு ‘பொக்கிஷம்’

டிசம்பர் 11 :
மகாகவி பாரதியார் அவர்கள் பிறந்தநாள்

தலைசிறந்த கவிஞர், தலைசிறந்த தேசபக்தர், தலைசிறந்த தமிழறிஞர், தலைசிறந்த ஆன்மீகவாதி, தலைசிறந்த எழுத்தாளர், தலைசிறந்த மனிதநேயப் பண்பாளர், தலைசிறந்த பத்திரிகையாளர், தலைசிறந்த கட்டுரையாளர். இத்தனை பண்புகளும் ஒருங்கே பெற்ற ஒரு மனிதர் மண்ணில் பிறப்பது என்பது மிக மிக அபூர்வமான ஒரு நிகழ்வாகும். இத்தகைய அபூர்வ தன்மையுடன் ஒரு மனிதர் நம்மிடையே வாழ்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார். மறைந்த பின்னரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

“இவர் ஒரு பொக்கிஷம். இவரைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று காந்தி மகான் மூதறிஞர் இராஜாஜியிடம் ஒரு முறை இந்த மேதையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். உலகமே போற்றும் காந்தி மகான் ஒருவரைப் பார்த்து பொக்கிஷம் என்று சொன்னது சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடிய விஷயமல்ல.

பாரதி என்றால் மகாகவி என்று இன்று சிறு பிள்ளைகளும் சொல்லுவார்கள். காந்திஜி பொக்கிஷம் என்று குறிப்பிட்டது மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியாரைத்தான்,

தமது தாத்தாவிடம் தமிழ் செய்யுட்களை மிகவும் விரும்பிக் கற்று வந்தார். ஆர்வத்தின் காரணமாகத் தமது பத்தாவது வயதிலேயே கவிதை இயற்றும் ஆற்றலையும் பெற்றார். சுப்பிரமணியன் எட்டையபுரம் சுப்பையா என்றே அனைவராலும் அழைக்கப்பட்டார்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடினார் பாரதி. தமிழ்மொழி ஒரு உன்னதமான மொழி, அதைப் போன்றதொரு செம்மையான மொழி உலகத்தில் வேறெதுவும் இல்லை என்பது பாரதியின் உறுதியான கருத்து.

நன்றி- மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாறு எனும் நூலிலிருந்து --

படமும்/செய்தியும்

வைக்கம் தந்தைப் பெரியார் அவர்களின் நினைவிடம் புனரமைக்கும் பணி ஆய்வு

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கம் பகுதியில் அமையப்பெற்றுள்ள தந்தைப் பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலகக் கட்டடப் பணிகளை 03.11.2023 அன்று, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம்

வெற்றிக்கதை

எங்களைப் போன்ற மாணவர்களை ஊக்குவிக்கவும், எங்களது தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் "சிறார்" இதழ்களை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" - *குறள் 396*

என்னும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் அறிவு சார்ந்த திறன்களை வளர்த்து அவர்களை ஊக்குவித்து வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய உதவும் வகையில் வெளியிடப்பட்டதுதான் புது ஊஞ்சல், தேன்சிட்டு சிறார் இதழ்கள்.

தமிழ்நாடு கல்வித்துறை சார்பில் மாணவர்களுக்கான (4 முதல் 5ஆம் வகுப்பு வரை), தேன்சிட்டு (6 முதல் 9 ஆம் வகுப்பு வரை) ஆகிய இரண்டு சிறார் இதழ்கள் மாணவர்கள் தங்கள் படைப்பாற்றலைப் பங்களிக்கவும், பல்வேறு பள்ளி அளவிலான போட்டிகளில் ஒரு பகுதியாக இருக்கவும், ஒரு சிறந்த தளத்தை வழங்குகிறது. மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகத்திற்கு வெளியேயும் உள்ள பலவிதமான உள்ளடக்கங்களை வெளிப்படுத்துவதை உறுதி செய்வதற்காக, இவ்விதழ்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்களுக்காகக் கனவு ஆசிரியர் என்ற இதழை வெளியிடுகிறது. அதில் இன்போடெயின்மென்ட் (தகவல் மற்றும் பொழுதுபோக்கு), கல்வி தொடர்புடைய பிரச்சினைகள், ஆசிரியர்கள் மேம்பாட்டிற்கான தகவல்கள் ஆகியவை இடம்பெறும். வாசிக்கும் ஆர்வத்தை வளர்க்கவும், வாசிக்கும் பழக்கத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தவும் பள்ளிக்கல்வித் துறையும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் இணைந்து இந்த இதழ்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இதில் மாணவர்கள் பங்களிக்கவும் கற்றுக் கொள்ளவும் முடியும்.

அறிவை விரிவு செய்; அகண்டமாக்கு! என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வார்த்தைகளுக்கேற்ப புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை. பாடப் புத்தகங்கள், தேர்வுகள், மதிப்பெண்கள் எனக் கற்றலையும் கட்டாயமாக்கிக்கொண்டு, ஒரு வட்டத்திற்குள் ஆசிரியர்களும், மாணவர்களும் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில், சிறந்த இளைப்பாறலாக, பாடப்புத்தகங்களைத் தாண்டி வெளி உலகத்தை அணுகும் ஒரு பாலமாக அவர்களின் கைகளுக்குள் வந்தமர்ந்திருக்கின்றன இந்த மூன்று இதழ்கள்.

ஒவ்வொரு இதழுக்குள்ளும், இருமொழி தகவல் மற்றும் பொழுதுபோக்கு, தமிழகத்தில் கல்வித்துறையின் நிகழ்வுகள் குறித்த சிறப்பு அம்சங்கள், பகுதி வாரியாக மாணவர்கள் பங்களித்த படைப்புகள், காமிக்ஸ், வண்ண வார்ப்புகள், கலை, கைவினை பற்றிய தகவல்கள், மாணவர்களுக்கான சிறுகதைகள், மாணவர்களுக்கான பல கவிதைகள், விளையாட்டுகள், புதிர்கள், விளையாட்டுச் செயல்பாடுகள் ஆகியன உள்ளன.

கனவு ஆசிரியர் என்ற இதழ் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு மாத இதழ். கல்வி, வாழ்க்கை, சமூகம், நலம், பொது எனப் பல உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கும் இந்த இதழில், பள்ளி மேலாண்மைக்குழுவின் அவசியம், புதுமையான முறையில் மாணவர்களுக்கு

பாரம்பரிய நினைவுச்சின்னங்கள், உயிரினங்கள் குறித்து சுவாரஸ்ய துணுக்குகள், கலை அறிவு என இரண்டையும் இந்த இதழ் பயிற்றுவிக்கிறது.

முக்கியமாக, இதழின் நடுப்பக்கத்தில் "மாணவர் படைப்புகள்" எனும் தலைப்பில், மாநிலம் முழுக்க உள்ள பல்வேறு அரசுப்பள்ளி குழந்தைகளின் பிஞ்சு விரல்கள் வரைந்த ஓவியங்கள் இடம்பெற்றுச் சித்திரச்சோலையாகக் காட்சியளிக்கிறது. மேலும், மாணவர்களிடத்தில் சகோதரத்துவத்தை வளர்க்கும் வகையிலான சமூக நல்லிணக்கக் கதைகள் இடம்பெற்று பிஞ்சிலே அமுதை ஊட்டும் நல் முயற்சியாக அமைந்திருக்கிறது.

கல்வி கற்பிக்கும் முறைகள், மாணவர்கள், பெற்றோர்களுடன் ஆசிரியர்களின் அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்தான விழிப்புணர்வு வழங்கப்படுகிறது.

இவை மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் அறிவைத் தூண்டும் வகையில், ஆரோக்கிய துணுக்குகள், தொழில்நுட்ப அறிமுகம், பொது அறிவுத் தகவல்கள், சுவாரஸ்ய சம்பவங்களும், ஆசிரியர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் சிறுகதைகள், பார்க்கவேண்டிய சினிமா பற்றிய விமர்சனங்கள் கூட அடங்கியிருக்கின்றன. மேலும், இந்த இதழிலுள்ள சிறப்பு என்னவென்றால் இதில் பெரும்பாலான கதைகள், கட்டுரைகளை அரசுப் பள்ளி ஆசிரியர்களேதான் எழுதுகிறார்கள். மேலும், கலை, சூழலியல் எனச் சாதனை படைத்த அரசுப் பள்ளிகளின் கதைகளும் வெளியாகி, மற்ற ஆசிரியர்களை தங்கள் பள்ளியையும் முன்மாதிரிப் பள்ளிக்கூடங்களாக மாற்றியமைக்க நினைக்கும் வகையில் ஊக்கப்படுத்துகிறது இந்தக் கனவு ஆசிரியர் இதழ்.

ஊஞ்சல் : படிக்கலாம்! பறக்கலாம்!

நான்கு, ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கும் "ஊஞ்சல்" இதழ் மாதம் இருமுறை வெளியாகும். முழுக்க மழலைக் குழந்தைகளுக்கு ஏற்ற வகையிலான மகிழ்ச்சிப் பாடல்கள், உயிரினங்கள் சொல்லும் சிறார் கதைகள், சித்திரக் கதைகள் என நிரம்பிக் கிடக்கின்றன. கலைத்திறனை வளர்க்கும் வகையில் ஓரிகாமி காகித மடிப்புக்கலை, ஓவியம் வரைதல் பயிற்சி, சிந்தனைத் திறனை வளர்க்கும் வகையில் புதிர்கள் கண்டுபிடித்தல், விடுகதைகள், புதிய நூல்களின் அறிமுகம்,ஆங்கிலம்-தமிழ் மொழிபெயர்ப்பு,

தேன் சிட்டு : உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கானது "தேன்சிட்டு" என்கிற மாதமிருமுறை இதழ். பதின்பருவ மாணவர்களுக்கு ஏற்றவகையில் அறிவியல் சார்ந்த கேள்வி பதில்கள், புதிர்கள், அறிவியல் சோதனைகள், தொல்லியல் வரலாறுகள், தலைவர்கள் வரலாறு, விளையாட்டுகள், ஆரோக்கியமான உணவுமுறைகள், வரலாற்றில் இன்றைய நிகழ்வுகள் என இதழ் முழுக்க பொது அறிவுச் சுரங்கமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பாடப்புத்தகங்களைத் தாண்டிய வெளியுலக அறிவை இந்த இதழ் மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை!

அரசுப் பள்ளிக் குழந்தைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். புத்தகத்துக்கு வெளியில் இருக்கும் உலகை அறிந்துகொள்ள வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். இதன்மூலம் கவனித்தல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய கற்றலுக்கான திறன்களை மேம்படுத்த முடியும். அரசுப் பள்ளிக்கூடத்தின் ஒவ்வொரு வகுப்பறையிலும் இந்த இதழ்கள் கொண்டு சேர்க்கப்பட்டு மாணவர்கள் இந்த இதழை படிப்பதற்காகவே பிரத்யேகமாக நேரம் ஒதுக்கித் தரப்படுகிறது. இந்த இதழ்களை அடிப்படையாக வைத்துப் பள்ளி, வட்டார, மாவட்ட அளவில் மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படுகின்றது. மேலும், இதழில் மாணவர்களையும் பங்குகொள்ளச்

செய்யும் வகையில் அவர்களின் ஓவியங்கள், கதைகள், கவிதைகளையும் தேர்ந்தெடுத்து வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வித் துறை சார்பில் வெளியிடப்பட்டு வரும் இவ்விதழ்கள் குறித்து அச்சன்புதூர், அரசு தொடக்கப்பள்ளி மாணவன் மு.இம்ரான் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது.

மாணவன் மு.இம்ரான்

என் பெயர் மு.இம்ரான். நான் அரசு தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறேன். என் பெற்றோர் பெயர் L. முகமது ஷாஜகான்- K. செய்யது அலி பாத்திமா ஆகும்.எனக்கு மு.நபிஷா பேகம் என்கிற சகோதரி இருக்கிறார். சகோதரி அச்சன்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்து வருகிறார். எங்கள் பள்ளியில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மதிய உணவு இடைவேளையில் புது ஊஞ்சல் சிறார் இதழ் வாசிப்பதற்காக எம் பள்ளித் தலைமை ஆசிரியர் வழங்குவார். நாங்கள் மூன்று மூன்று மாணவ, மாணவியர்கள் குழுவாக அமர்ந்து அனைத்துப் பக்கங்களிலும் உள்ள படைப்புகளை வாசித்து வருகிறோம். உண்மையில் என் போன்ற மாணவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் கிடைக்கிறது. மொழியறிவு படைப்பாற்றல், மொழியறிவு உணர்வு வளர்கிறது. நாமும் இது போன்ற படைப்புகளைத் தயாரிக்க வேண்டுமென்ற உந்துதல் ஏற்படுகிறது. நானும் டாக்டர் அப்துல் கலாம் ஐயா குறித்துப் படைப்பு அனுப்பி உள்ளேன். உண்மைச் சம்பவங்கள், மொழியறிவு படைப்புகள், கவிதைகள், வண்ணப்படங்கள் பயனுள்ளதாக இருக்கின்றன. இந்த இதழை வாசிப்பதன் மூலம் எனது வாசிப்புத்திறன் மிகவும் மேம்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மூலம் நான் பெற்று வரும் நல்ல செயல்களை அன்புடனும் பெருமையுடனும் நினைத்து நன்றி கூறுகிறேன். மகிழ்கிறேன்.

இவ்விதழ்கள் குறித்துச் சிவகுருநாதபுரம், அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி ந. சங்கரி அவர்கள் நம்மிடம் கூறும்போது,

மாணவி ந.சங்கரி

என் பெயர் ந.சங்கரி. நான் சிவகுருநாதபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவு பயின்று வருகிறேன். என் தந்தை பெயர் நயினார். அவர் கட்டடம் அமைக்கும் தொழில் செய்து என்னையும் என் தம்பியையும் படிக்க வைக்கிறார். எனது அறிவியல் ஆசிரியர் கவிதா அவர்கள் எனக்குத் தேன்சிட்டை பற்றி அறிமுகப்படுத்தினார். தேன்சிட்டுப் படித்ததில் எனக்குப் பிடித்த நூல் மாயமாகும் கண்ணாடிக் குவளை, மஞ்சள் விளையும் அந்தியூர் ஆகும். மாயமாகும் கண்ணாடிக் குவளை செயல்பாட்டை நான் செய்து பார்த்தேன். அதில் வெற்றியும் அடைந்தேன். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. மஞ்சள் விளையும் அந்தியூர். அந்த ஊரைப்பற்றி ஒரு சிறுவன் சிறப்பாக எழுதி இருந்தான். எங்களைப் போன்ற மாணவர்களை ஊக்குவிக்கவும், எங்களது தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளவும் இத்தகைய சிறப்பான இதழ்களை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விதழ்கள் குறித்துத் தென்காசி, அரசு (பெ) மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திருமதி மு.மேனகா அவர்கள் நம்மிடம் கூறும்போது,

திருமதி மு.மேனகா

என் பெயர் மு.மேனகா, நான் 17.12.2012 தேதியிலிருந்து அரசு (பெ) மேல்நிலைப்பள்ளியில் (தென்காசி) பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். தேன்சிட்டு இதழுக்கான ஒருங்கிணைப்பாளராக உள்ளேன். கனவு ஆசிரியர் இதழில் ஆசிரியர் படைப்புகள், வகுப்பறை அனுபவங்கள், அவர்களது சிறப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை மிகவும் உபயோகமாக உள்ளன. ஆசிரியர்களின் மேம்பாடு கல்வி, வாழ்க்கை, சமூக நலம், பொது உள்ளடக்கம், புதுமையான கல்வி கற்பிக்கும் முறைகள் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும். கனவு ஆசிரியர் இதழுக்கு எனது மனமார்ந்த நன்றி!

தொகுப்பு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்காசி மாவட்டம்.

சிறுகதை

உயிர்த்துடிப்பு

- பாரதி வசந்தன்

தாயுமானவன் வீட்டுத் தோட்டத்தில் அந்தப் பூவரச மரம் நிறை மாத கர்ப்பிணியைப் போல நின்று கொண்டிருந்தது. பக்கத்தில் வேப்பமரம் கிளை பரப்பி காற்றில் அசைந்திருக்க அருகிலேயே கல்யாண முருங்கை 'நெடுநெடு' என்று வளர்ந்திருந்தது.

தாயுமானவனுக்கு மரங்கள் என்றால் ரொம்பவும் இஷ்டம். அதிலும் கல்யாண முருங்கை மரத்தின் மீது அவனுக்குக் காதலே இருந்தது. சாதாரண நாட்களில் மற்ற மரங்களைப் போல் வெறும் முள் மரமாக இருக்கும் கல்யாண முருங்கை வசந்த காலம் வந்தால் மரங்களின் அற்புதமாய் மாறும் அதிசயம் தாயுமானவனுக்கு வியப்பாக இருக்கும்.

அந்தச் சமயங்களில் கல்யாண முருங்கை மரத்தின் உச்சியில் கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போல எந்நேரமும் பூத்துச் சிரிக்கும் சிவப்பு நிறப் பூக்களையும், அவற்றின் மேல் எங்கிருந்தோ வந்து உட்கார்ந்து ஓயாமல் கூவிக் கொண்டிருக்கும் மைனாக்களையும், காக்கைகளையும், குயில்களையும் பார்த்து ரசிக்க இரண்டு கண்கள் போதாதென்று சொல்லுவான் தாயுமானவன்.

அவனுக்குக் கல்யாண முருங்கை மரம் மட்டும் இல்லை எந்த மரமாக இருந்தாலும் சரி அவை தோட்டம் முழுக்க நிறைந்திருக்க வேண்டும். அதற்காகவே அவன், தன் அப்பாவிடம் சொல்லி அவர் அப்போது நட்டு வைத்திருந்த கல்யாண முருங்கையும் மற்ற மரங்களும் பெரிய தோட்டமாகி அவருடைய மறைவிற்குப் பிறகும் இன்றைக்கும் இருக்கிறது. தோட்டத்தின் நடுநடுவே அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்னை மரங்கள். அவை இடைவெளி விட்டு நடப்பட்ட உயரமான ஒற்றைக் கோடுகளைப் போன்று, உச்சியில் அழகிய கீற்றுகளுடன், காற்றில் படபடக்கும் கைவிரல்களை நினைவுபடுத்துகிறது மாதிரி அமைதியாக நின்று கொண்டிருந்தன.

இவை இப்படி என்றால் அந்நாளில் உயரமான கோரிமேட்டில் போய் நின்றபடி தூரத்திலிருந்து கிழக்குத் திசையின் கீழே கவனித்தால் 'பச்சைப் பசேல்' என்று ஒரே சமமாகப் பந்தல் அமைத்திருப்பதைப் போல தென்னை மரங்கள் அடர்த்தியாகக் காட்சியளிக்கும். அவற்றின் இடைவெளிக்குள் உற்றுப் பார்க்கிற போது மிக தூரத்தில் நீலச் சாயத்தைத் தொட்டிக்குள் நிரப்பி வைத்திருப்பது போன்று விசாலமான கடல் இருப்பதும் நன்றாகத் தெரியும். அப்படி ஒரு வனப்புடன் இருந்தது புதுச்சேரி.



அந்தப் பழைய நினைப்பு என்றைக்கும் மாறாத தாயுமானவன் வீட்டுக்குள் இருந்த சமயம். தோட்டத்தில் எதையோ வெட்டுகிற சத்தம் கேட்டதும் வெளியே வந்து எட்டிப் பார்த்தவனுக்குப் பயங்கர அதிர்ச்சி. அங்கே அவனுடைய தம்பி சுந்தர் பூவரசமரத்தின் மீது ஏறிநின்று கொண்டுகிளையை வெட்டுவது தெரிந்தது. கீழே சுந்தருடைய நண்பன் ரவி அவனுக்கு ஒத்தாசையாக அருகில் இருந்து உதவி செய்து கொண்டிருந்தான்.

தாயுமானவனுக்கு அவர்கள் செய்யும் காரியத்தைக் கண்டதும் சட்டென்று கோபம் வந்தது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நிதானமாகவே பேசினான்.

"இப்ப எதுக்கு மரத்தை எல்லாம் வெட்றீங்க"

தாயுமானவன் கேட்டதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

கொஞ்ச நேரம் மரம் வெட்டுவதை நிறுத்திய சுந்தர் எதுவும் சொல்லாமல் மறுபடியும் வெட்ட ஆரம்பித்தான்.

"நான் கேட்கிறேன் இல்ல"

தாயுமானவனிடமிருந்து கோபத்துடன் வார்த்தைகள் வெளிப்பட்டதும் சுந்தரின் நண்பன் ரவி முந்திக் கொண்டு பேசினான்.

"மரமெல்லாம் வளர்ந்து வேலிக்கு இடைஞ்சலா இருக்குது தாயுமானவன். அதான் வெட்டிடலாம்னு இருக்கோம்"

" மரம்தானே வளர்ந்து இப்ப வேலியா இருக்கு. அது எப்படி வேலிக்கு இடைஞ்சலா இருக்கும்"

தாயுமானவனின் இந்தக் கேள்வி சுந்தரையும், ரவியையும் எரிச்சல்படுத்தியிருக்கக் கூடும். சுந்தர் வேக வேகமாக ஒரு கிளையை வெட்ட அது முறிந்து தாயுமானவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் பக்கத்திலேயே வந்து விழுந்தது. அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவன் சொல்லி அவர்கள் கேட்கிற மாதிரியும் தெரியவில்லை. இருந்தாலும் சொன்னான்.

"சரி சரி கொஞ்சமா கிளைகளை கழிச்சிட்டு இறங்கிடுங்க. நிழலுக்கு இருக்கிற மரங்களையெல்லாம் சுத்தமா வெட்டிடாதீங்க"

எச்சரிப்பது போல தாயுமானவன் பேசிக் கொண்டிருக்கும்போதே பூவரச மரத்தின் எல்லா கிளைகளும் 'மள மள' என்று வெட்டப்பட்டு ஒன்றின்மேல் ஒன்றாக வந்து விழுந்தன. செத்த நாழிகைக்கு முன்னாடி எல்லாம் சிரித்துக் கொண்டிருந்த பூவரச மரம் இப்போது தரையில் விழுந்து புரண்டு அழுவதைப் போல இருந்தது தாயுமானவனுக்கு. 'என்ன இது இப்படிச் செய்கிறார்களே' என்று எதுவும் பேசத் தோன்றாமல் அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ரவி தயங்கித் தயங்கிப் பேசினான்.

"மரமெல்லாம் பெருசா வளர்ந்துட்டா பிற்பாடு வெட்றதுக்கு கஷ்டமா இருக்கும்னு அம்மாதான் எல்லாத்தையும் அடியோடு வெட்டச் சொல்லிட்டாங்க'.

அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த தாயுமானவனின் அம்மாவும் அதை ஆமோதிப்பது போலவே பேசினாள்.

"ஆமாம் தம்பி எதுக்கு இதெல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லாம இடத்தை அடைச்சிகிட்டு இருக்கணும். வெட்டிப் போட்டா விறகுக்காவது ஆகும் இல்ல"

தன் அம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்டதும் தாயுமானவன் ஒரு கணம் அதிர்ந்துபோய் நின்றான். 'அது பாட்டுக்கு சிவனேன்னு நின்னுகிட்டு நமக்கு நிழலையும், காற்றையும், விறகையும் தர்ற மரங்களையெல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லைன்னு சொல்லி வெட்டிப் போடச் சொன்னா உண்மையிலேயே ஒருத்தருக்கும் பயன்படாம அடுத்தவங்களுக்கு இடைஞ்சலாகவே சில மனுஷங்க தன் ஆயுளுக்கும் வாழ்ந்துகிட்டு இருக்காங்களே அவங்கள நாம என்ன பண்றது'. தாயுமானவன் தன் அம்மாவிடம் இதைக் கேட்கலாம் என்று நினைத்தபோதே பக்கத்தில் நின்றிருந்த வேப்பமரத்தையும் வெட்டிக் கீழே போட ஆரம்பித்தான் சுந்தர்.

தோட்டம்பூராவும்கிளைகளும்,இலைகளுமாக இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன. ரவியும், அம்மாவுமாகச் சேர்ந்து கொண்டு கிளைகளை எடுத்து அப்புறப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தாயுமானவன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே கல்யாண முருங்கை மரம் நின்று கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அதுவும் காணாமல் போய்விடும் என்று நினைத்தவன் அதையாவது வெட்டாமல் தடுத்து நிறுத்தி விடலாம் என்கிற நப்பாசையில் கெஞ்சுவது போல சுந்தரிடம் பேசினான்.

"ஏன் சுந்தர் கல்யாண முருங்கை மரத்தில் அந்தப் பக்கமா நீட்டிகிட்டு இருக்கிற கிளைய மட்டும் கழிச்சா போதாதா மரத்தையே அடியோட வெட்டணுமா"

வயதிலும், வாழ்க்கை அனுபவத்திலும் பெரியவனான தாயுமானவனின் வேண்டுகோளை அவன் தம்பி சுந்தர் கேட்டதாகத் தெரியவில்லை. அவன் பாட்டுக்குக் கோடாரியால் அடிமரத்தை வெட்டுவதிலேயே குறியாக இருந்தான். ஓர் அரக்கனை வெட்டி வீழ்த்துகிற தேவன் என்கிற நினைப்பு அவனுக்கு. 'சில விஷயங்களை சொன்னால் கேட்பார்கள் என்று நினைப்பவர்களிடத்தில்தான் சொல்ல முடிகிறது. தன் பேச்சுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பது தெளிவான பிறகு நாம் என்ன பேசி என்ன வந்து விடப்போகிறது' என்று பேசாமல் நின்றிருந்த

தாயுமானவன் கல்யாண முருங்கை மரத்தை வாஞ்சையுடன் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனான்.

ஒவ்வொரு நாளும் பறவைகள் வந்து இளைப்பாறுகிற அந்த மரத்தின் நடுவே பிரிந்த சிறு கிளையில் காக்கையின் கூடு ஒன்று கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அது என்ன ஆகுமோ என்று தாயுமானவன் மனதுக்குள் பதறிய போதே சுந்தர் கோடாரியால் வெட்டியதில் அதிர்ச்சி தாங்காமல் அந்தப் பச்சை மரம் ஆடிய போது எங்கிருந்தோ வந்த காக்கை ஒன்று மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து அங்கும் இங்கும் பறந்தபடி பெருங்கூச்சலுடன் அலறியது.

அந்தக் காக்கைதான் மரத்தில் கூடு கட்டியிருக்க வேண்டும். தான் கூடு கட்டியிருந்த மரம் வெட்டப்பட்டு தன் வீடும் காலியாகப் போகிறது என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும். அதன் கதறல் தாயுமானவன் மனதை உலுக்கியபோதே நிறைய காக்கைகள் கூட்டம் கூட்டமாக வந்து தன் உறவுக்காகப் பெருங்குரல் கொடுத்து இரைச்சலுடன் கத்த ஆரம்பித்துவிட்டன.

அப்போதுதான் சுந்தருக்கும், ரவிக்கும் காக்கை ஒன்று கூடு கட்டியிருந்த விஷயம் தெரியவந்தது போல ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். தாயுமானவனின் அம்மாவுக்கு மனசு என்னவோ போல் ஆகியிருக்க வேண்டும்.

"அடடா காக்கா கூடு கட்டியிருக்கிறத கவனிக்காம போயிட்டீங்களேப்பா. பாவம் அது".

அவள் பரிதாபப்பட்டபோது வேர்க்க விறுவிறுக்க மரங்களை வெட்டிக் கொண்டிருந்த சுந்தர் தன் மீது வழிந்திருந்த வியர்வையைத் துடைத்தபடி முதல் முதலாகப் பேசினான்.

"காக்கா வெறும் கூடு மட்டும் தானே கட்டியிருக்கு. இன்னும் குஞ்சு பொரிக்கல இல்ல.

குஞ்சுகளைத் தவிக்க விட்டா தானே பாவம் வந்து சேரும். மரத்தை வெட்டியாச்சு இனிமே என்ன செய்ய முடியும்".

இதெல்லாம் ஒரு சாதாரண விஷயம் என்பது போல சுந்தர் பேசியபடி வெட்டிய மரத்தை கைவைத்துத் தள்ள கூட ரவியும் சேர்ந்து கொண்டு தள்ள கனமின்றி தக்கையாக நின்றிருந்த அந்தக் கல்யாண முருங்கை மரம் மெல்ல சாய்ந்து கொண்டிருந்தது.

அந்தக் கணத்தில் பெரும் சத்தத்தோடு தாயுமானவன் வீட்டுக் கூரைமேல் மரம் முறிந்து விழவும், அதன் பளு தாங்காமல் மின்சார கம்பத்திலிருந்து கனெக்ஷன் கொடுத்திருந்த மெயின் ஒயர் அறுந்து விழவும் சரியாக இருந்தது. இந்த விபரீதம் நடக்கும் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்காமல் இருந்த தாயுமானவன் என்ன

செய்யலாம் என்று யோசிப்பதற்குள் அறுந்து விழுந்த மின்சார ஒயரிலிருந்து தெறித்த நெருப்புப் பொறிகள் மேலே பறந்து அவன் வீட்டுக் கூரையின் மேல் விழுந்து 'குப்' என்று பற்றிக்கொண்டது.

வீடு எரியத் தொடங்கியது. தாயுமானவனுக்கு பதற்றத்திலும், பயத்திலும் ஒன்றும் புரியவில்லை. அந்த நிலையிலும் அவன் ஓடிப்போய் தோட்டத்திலிருந்து தண்ணீரை எடுத்து வந்து கூரை மேல் வீசினான். சுந்தரும், ரவியும் ஏற்கெனவே வெட்டிப் போட்டிருந்த மரங்கள் வழியை அடைத்துக் கொண்டிருக்க சிரமப்பட்டு அவற்றைத் தாண்டி தண்ணீரை எடுத்து வந்து நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருந்த திசையை நோக்கி ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

"ஐயையோ வீடு பத்திகிட்டு எரியுதே. ஓடியாங்கோ ஓடியாங்கோ".

தாயுமானவனுடைய அம்மா பெருங்கூச்சல் போட்டுக் கூவியதும் அக்கம் பக்கத்திலிருந்து நிறைய பேர் ஓடி வந்தார்கள். ஆளாளுக்குத் தண்ணீரை வாரி இறைத்தும், வீட்டின்மேல் ஏறி கூரையைப் பிரித்து எறிந்தும் எப்படியோ போராடி ஒரு வழியாக நெருப்பை அணைத்து விட்டிருந்தார்கள்.

நடந்து முடிந்து போன அந்தப் பயங்கரத்தைத் தாயுமானவன் நினைத்தபோது அவனை அறியாமல் அவன் உடல் லேசாக நடுங்கியது. பிரமை பிடித்தவனைப்போல வீட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மோட்டுவளை சுத்தமாக எரிந்து போனதாலும், அதை ஜனங்கள் பிரித்துப் போட்டதாலும் வீட்டின் ஒரு பகுதி பொத்தலாகி இருந்தது.

“அங்க இங்க கடனை வாங்கி இப்பதானே வீட்ட புதுசா கட்டினேன். யாரு கண்ணு பட்டுச்சோ அதுக்குள்ள என் வீடு இப்படிப் பத்திகிட்டு எரிஞ்சிடுச்சே”.

தன்னுடைய அம்மா ஒப்பாரி வைத்து அழுது புலம்புவதைப் பார்க்க பார்க்க தாயுமானவனுக்கு வேதனையாக இருந்தது. அந்தத் துயரமான சூழல் அவனை வதைத்தபோதும் அவன் தன் அம்மாவை ஊடுருவிப் பார்த்தபடி பேசத் தொடங்கினான்.

“அம்மா மனுஷர்களுக்கு வீடுகள் எப்படியோ அப்படித்தான் பறவைகளுக்குக் கூடுகள். நம்ம வீடு எரிஞ்சு போச்சேன்னு நாம கஷ்டப்படுற மாதிரிதானே பாவம் அந்தக் காக்கையும் தன் கூடு கலைஞ்சு போச்சேன்னு கலங்கி இருக்கும். அந்தத் துயரம் என்னன்னு இப்பவாவது உங்களுக்குப் புரிஞ்சுதா”

அழுது கொண்டிருந்த தாயுமானவனுடைய அம்மா மூக்கைச் சிந்தி துடைத்தபடியே அவன் சொன்னதின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டவளைப்போல சுந்தரையும், ரவியையும் மாறி மாறிப் பார்த்தாள். அவர்கள் இருவரும் கையும் களவுமாகப் பிடிபட்ட கள்வர்களைப்போல என்ன சொல்வது என்று புரியாமல் தலைகுனிந்தபடி நின்றிருந்தார்கள்.

தாயுமானவன் சுந்தரின் அருகே நெருங்கிப் போனான். எப்படித் தன் அண்ணனுடைய முகத்தை நிமிர்ந்து பார்ப்பது என்று சுந்தர் சங்கடப்பட்டது அவனுடைய முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

“சுந்தர் நீ செய்த காரியத்தால எத்தனை பெரிய விபரீதம் ஏற்பட்டிருக்குது பார்த்தியா. மரங்கள வெட்டாத அதுலயும் அந்தக் காக்கை கூடு கட்டியிருக்கிற கல்யாண முருங்கை மரத்தையாவது வெட்டாம விட்டுடுன்னு கெஞ்சினேனே அது ஏன் உனக்குக் கேட்காமப் போச்சு. கேவலம் ஐந்தறிவு உள்ள பறவைதானேன்னு அலட்சியம்.

நீ ஆறறிவு கொண்ட மனிதன்னு திமிரு. காக்கையோ, குருவியோ இல்ல எந்தப் பறவையோ மனுஷனுக்குத் தீங்கு செய்யணும்னு நெனைக்குதா. ஆனா மனுஷன் அப்படி இல்ல. அவன், தன் சுயநலத்துக்காக நியாயம், அநியாயம்னு பார்க்காம எத வேணும்னாலும் செய்வான். செய்துட்டு அதுக்கு வியாக்கியானம் வேற பேசுவான் உன்னை மாதிரி”

தாயுமானவன் நெற்றிப் பொட்டில் அறைந்தது மாதிரி சுந்தரிடம் சொல்லிவிட்டு எதிரே பார்வையைச் செலுத்தினான். அங்கே குற்றவாளிக்கு உடந்தையாக இருந்த இன்னொரு குற்றவாளியைப் போல ரவி நின்றிருந்தான்.

“ரவி எப்பவுமே இயற்கையை நேசிக்கிற மனுஷங்களாலதான் இந்த உலகத்தையும் நேசிக்க முடியும். எந்த ஒருத்தனும் தன்னைச் சுற்றியுள்ள அனைத்துமே தாறுமாறா போகணும்

ஆனா தான்மட்டும் நல்ல விதமா இருக்கணும்னு நெனைக்கிறது ரொம்ப தப்பு. மரம் வெட்டினா எனக்கென்ன, மற்ற உயிர்கள் கஷ்டப்பட்டா நமக்கென்னன்னு வாழறதுக்குப் பேரு வாழ்க்கையில்ல. எல்லா உயிர்களையும் தம் உயிர் போல பாவிக்கணும். அதுதான் உண்மையிலேயே உயர்வான வாழ்க்கை”.

எந்தவித வெறுப்பையும் காட்டாமல் அமைதியாகப் பேசிக்கொண்டு போன தாயுமானவன் நீண்ட பெருமூச்சு விட்டவனாகத் தன் வீட்டுக் கூரைமேல் விழுந்து கிடந்த கல்யாண முருங்கை மரத்தைப் பார்த்தான்.

அதன் கிளையில் இருந்த காக்கைக் கூடு உடைந்துபோய் சிதறிக் கிடந்தது. தோட்டம் முழுக்க பிஞ்சுக் குழந்தைகளின் கை, கால்களை தனித்தனியே வெட்டிப் போட்டதுபோல மரங்களும், அவற்றின் கிளைகளும் அங்கங்கே குவிந்து கிடந்தன.

அந்தச் சூழலைக் காண சகிக்காமல் கனத்த இதயத்தோடு எதிர்த்திசையில் பார்த்தான் தாயுமானவன். அங்கே தன் கூட்டைப் பறிகொடுத்த அந்தக் காக்கை, சொந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஓர் அகதியைப் போல வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கத்துவதும், பின் வேலியில் உட்கார்ந்து தன் சிறகுகளைப் ‘படபட’ என்று அடித்துக் கொண்டு பரிதவிப்பதுமாக இருந்தது.

நன்றி: **இலக்கிய மலர்–2023**
எனும் நூலிலிருந்து...

விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு

நூல் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 01.11.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" (தமிழ் நூல்) மற்றும் "Tamil Nadu's Contribution to the Freedom Struggle" (ஆங்கிலம் மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் திரு. **கோபாலகிருஷ்ண காந்தி** அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

ஆசிய விளையாட்டுப் போட்டி - ஹாங்சோ 2023
பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு வீரர் - வீராங்கனைகளுக்கு
உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நாள் : 12.10.2023 | இடம் : தி லீலா பேலஸ், சென்னை

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,